...ன் ஷே 15. விலை 2 அணா REGD NO 4642

திராவிடநாடு

மலர் 12 | 15–11–53 | இதழ் 20

கடைசிப் பிரதிநிதி!

[ப. வாணன்]

"ஆரியனாவது? திராவிடனாவது? ப்போது இந்த இனப் பிரிவெல் ம் ஏது?"

"ஆரியனாவது? திராவிடனாவது? ந்தமாதிரி இனப் பிரச்னையை, ந்த நவீன காலத்திலே எடுக்க மா?"

"திராவிடநாடு, திராவிட நாடு ன்கிறார்களே, அது எப்படி தனித் யங்க முடியும்?"

"ஜாதி ஒழியணும், ஒழியணும் று கூறிக்கொண்டே பிராமணர் பிராமணரல்லாதார் பிரச்னை இன் ம் இவர்களே வைத்துக்கொண்டி க்கிறார்கள்—ஆகவே இவர்கள் துப்புவாதிகள்!"

"திராவிட நாடு பிரிந்தால், பிரா ணர்களையெல்லாம், நாடு கடத்தி விடுவீர்களா? அப்படியானால், 'முழு துப்புவாதிகள்' என்றுதானே, களை அழைக்கவேண்டும்?"

*

ஒரு நிமிஷ நேரம், உங்கள் சிந் னையை சென்ற காலத்திற்கு லுத்துங்கள்.

சேலம் மாநாடு முடிந்தவுடன் பொதுச் செயலாளர் தயா பெரும் படை நாடு பூராவும் று 'திராவிட நாடு' கொள் கையை விவரித்தபொழுது, நம்மை க்கி வந்த கேள்விகள் தானே,

★

இவை! கிட்டத்தட்ட எட்டு ஆண்டு களுக்கு மேலாகிவிட்டன, இந்த கேள்விகளுக்கும், ஐயப்பாடுகளுக் கும் நாம் பதில் கூறி, விளக்கம் தந்து.

"மனித சமுதாயத்தின் நல் வாழ்வே நம் குறிக்கோள். அந்த குறிக்கோளை அடைய தட்பவெட்ப நிலைக்கேற்ற இயற்கைப் பிரிவோடு அமைந்த வெவ்வேறு பூபாகத்தில் வாழும், வெவ்வேறு இன மக்கள், தங்கள் தங்கள் கலாச்சாரத்தோடு கூடிய தனி அரசை அமைத்துக் கொண்டால்தான் அந்தந்த இனம், பூபாகம் முன்னேற முடியும். அப் படி பற்பல பகுதிகள் முன்னேறி ஞல்தான், மொத்தத்தில் மனித சமுதாயம் முன்னேறும்—நல் வாழ் வடையும்." இதுதான் உலக பேரறி ஞர்கள், ஒன்றாகக்கூறும் மனித இலட்சியப்பாதை. இந்த அடிப் படை நோக்கத்திலேதான் நம் இன மக்களாகிய திராவிடர் விடுதலை பெற்று தென்னிந்திய பூபாகம், திராவிடநாடாக திகழவேண்டும். வெள்ளையன் ஆட்சியில் ஒன்றாக இருந்ததே தவிர, வரலாற்றிற்கு எட்டிய நாள் முதல், திராவிடம் யாருக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்த தில்லை. நமது இனம் தனிக் கலாச் சாரப் பண்பு கொண்டது. சரித்திர வாயிலாக நாம் அறிந்ததைவிட, வட வருக்கும் — தென்னாட்டாருக்கும் இருக்கும் தினசரி வாழ்க்கை, அவனவன் அபிலாஷைகள், பழக்க வழக்கங்கள், இன்றும் திராவிட இனம் தனித்து வாழ் கிறது என்பதை காண்பிக்கிறது. ஆகவே திராவிடநாடு தனியாக வாழ்வதற்கு வேண்டிய மகோன்னத கலாச்சாரத் தேவையும் இருக் கிறது.

இதே மாதிரி பொருளாதாரத் துறையிலும், வடநாடு, திரா விடத்தைச் சுறையாடுகிறது. வட நாட்டு முதலாளித்துவம், ஏன் திராவிடத்தில் கொழிக்கிறது என்று காரணங்கள் பல கூறலாமே ஒழிய, அந்த உண்மையை யாரும் மறைக்க முடியாது. இந்த நிலை வளர்ந்து கொண்டே போனால், இந்தியா மாதிரி பெரிய உபகண்டத் தில் முதலாளித்துவம் வேருன்றிப் போனால், அதை பிய்த்து எறிவ தற்கே, மனித சமுதாயம் பல நூற்றாண்டுகளை செலவழிக்கநேரிடும். ஆகவே நாம் விரும்பும் சமதர்ம முறையில், பேதாபேதமற்ற சமு தாயத்தை உண்டாக்கும் அரசை ஏற்படுத்த, நமக்கென்று நாடு வேண் டும். அதுவே திராவிட நாடு!

அரசியல் துறையிலும் நமது இனத்திற்கும், வட இந்தியர்களுக் கும் ஒட்டவைக்கமுடியாத பெரும்

மாறுதல் இருக்கிறது. வட இந்தியாவில், வங்கம் தவிர மற்ற இடங்களில் ஹிந்துமகாசபையோ அல்லது அதைவிட அதிதீவிர மதப் பித்துக்கொண்ட கட்சிகளோதான், இருக்கின்றன. இப்போது போகிற போக்கிலே, முற்போக்கு வாதிகள்தான் ஜாதீயத்தின் முன் பணிந்து போய் விடுவார்களே தவிர, இன்னும் பல ஆண்டுகளுக்கு, ஆண்டவன் பெயரால் கேட்கப்படும் அபார செல்வாக்கைத் தட்டிக் கேட்கும் ஆள் வட இந்தியாவில் தோன்ற நியாயமில்லை.

ஒரு சாதாரண ஹிந்து சீர்திருத்த மசோதா, ஆசிய ஜோதியின் முழு உதவி இருந்தும்கூட, சட்டமாக்க முடியாதவாறு போய்விட்டதே! காரணம் என்ன? நேரு முயன்றும் முடியாத அளவு சனாதனம், வடநாட்டில் அரசாள்கிறது. இப்பவே, இப்படியானால், நேருவுக்குப்பின்........? கட்ஜு, தாண்டன், ராஜகோபாலாச்சாரி, இன்னும் இருக்கிற அத்தனை ஹிந்து ஜாதீய வெறியர்கள்தானே நம்மை ஆளுவர்.

ஆகவே அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய, மூன்று துறைகளிலும நாம் வடநாட்டோடு சேர்ந்து வாழ முடியாது என்று அறிந்தோம்! மக்களிடம் சென்று நமது குறையைக்கூறினோம். நமக்கேன்ன என்று இருந்த திராவிடத் தோழனை தட்டி எழுப்பினோம். அதற்கு அவன் மூதாதையர் வாழ்ந்து அழிந்ததை கவனப்படுத்த வேண்டியிருந்தது.

வாழ்ந்துவீழ்ந்ததை அறிந்த திராவிடன் நம்மால் முடியுமா? என்று பயத்தோடு கேட்டான்.

நம்மால் முடியாததில்லை. முடியாவிட்டாலும் வீரச்சாவு — வெற்றிப் பாதையாகட்டும் என்று அடுத்தக் கட்டத்தில் புறப்பட்டுவிட்டான்.

இந்த நேரத்திலே வருகிறார், ஆச்சாரியார்; தன் பதவி வரிசை சூழ, கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன, பழையகேள்விகளைக்கேட்ட வண்ணம்.

ஏதோ பெரிய தத்துவ ரீதியில் யாருமே பதில் கூற முடியாதென்ற இறுமாப்பில், திராவிடமாவது — ஆரியமாவது! என்று கேட்டிருக்கிறார், ஆச்சாரியார்.

இதற்குப் பதிலாக சரித்திர ரீதியான ஆராய்ச்சிகளையும், பெரும் பெரும் மூதறிஞர்களின் பேருரைகளையும் இங்கு எழுதத் தேவையில்லை. நாட்டிலே, தேவைக்கு மேலேயே நாம் விளக்கி இருக்கிறோம்.

ஒரே ஒரு கேள்வியை ஆச்சாரியாரிடம் கேட்டால், அவர் என்ன பதில் கூறுவார்.

"வெள்ளையனாவது — இந்தியனாவது? மனிதனே ஆண்டவன் படைப்புதானே! அவன் வகுத்த வழிப்படிதானே நமக்கும். அப்படியானால் நீ ஏனப்பா சுதந்திரப் போராட்டம் நடத்தினாய்?" என்று ஆச்சாரியாரைக்கேட்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு ஆச்சாரியார் என்னென்ன பதில் கூறுவாரோ, அந்த பதில்களெல்லாம் நாமும் நம்மைப் பார்த்து கேட்கும் கேள்விகளுக்குக் கூறவேண்டியதுதான்-இதோடு பல்லாயிரக்கணக்கான மேடைகளில் பல லட்சக்கணக்கான மக்களுக்கு விளக்கி இருக்கிற திராவிடநாட்டுக் கொள்கையில் மிகப் பழைய சந்தேகங்களை கிளப்புகிறார் ஆச்சாரியார்.

திராவிட இனப் பிரச்னையை நாம் கிளப்பவில்லை. அது இருக்கின்ற உண்மை. மறைக்கப்பட்ட உண்மை. இன்னும் சொல்லப்போனால், தற்போது இருக்கின்ற நிலைமையில் மக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படவேண்டிய உண்மை.

சுதந்திரம் பெற்ற இந்தியாவில் "இந்திய இனம்" என்ற ஒரு புது இனத்தையே ஆரம்பிக்க தேசீயத் தலைவர்கள் திட்டம் போடுகிறார்களே அதை எந்தக்கணக்கில் சேர்ப்பது. 'இந்திய இனம்' உற்பத்தி செய்ய முற்படுபவர்கள் இனவெறியர்கள் என்று கருதப்படுமானால், தூங்கிக்கொண்டிருக்கிற இனத்தை தட்டி எழுப்பும் நாம் இனவெறியர்கள் என்று அழைக்கப்பட்டால் கவலைப்படத் தேவையில்லை.

அடுத்தபடியாக கூறுகிறார், திராவிடம்தனித்தியங்கமுடியாதென்று. இந்தியத் துணைகண்டத்தில் இருக்கும் அரசியல் வாதிகளில், ஆச்சாரியாரிடமிருந்து இந்த வார்த்தை வந்தது கேட்க ஆச்சரியமாய்த்தானிருக்கிறது.

டென்மார்க்கும், பிரான்ஸும், ஜெர்மனியும், நார்வேயும், ஸ்வீடனும் இத்தாலியும், ஹாலந்து—இன்னும் அமெரிக்கா, ரஷ்யா, சீனாதவிர வேறெந்த நாடும்—திராவிடத்தைவிட பெரியநாடுகளில்லை என்பதும், எத்தனையோ படையெடுப்புகள், பொருளாதார, சமுதாயப் புயல்களையெல்லாம் தாண்டி இவைகள் தனித்து, இன்னும் வாழ்கின்றன என்பதையும் இனிமேலும் நாம் விளக்கத் தேவையில்லை. மூன்று டக்கமும் இயற்கைத் துறைமுகங்களைக்கொண்ட நீண்ட கடற்கரையையும், மிக வளமான பூபாகத்தையும் கொண்ட திராவிடம் தனித்து வாழமுடியுமா என்று ஆச்சாரியார் கேட்டது அவர் வளர்ந்திருக்கும் உயரத்திற்கும், வயதுக்கும், அறிவுக்கும் ஏற்றதல்ல.

இதையெல்லாவற்றையும்விட சென்ற பெரும் போருக்குப் பிறகு ஒரு நாட்டை மற்றொரு நாடு பிடித்துக்கொள்வது, அடிமைப்படுத்துவது என்பதெல்லாம் 'பொய்யாய் பழங்கதை'யாய் மறைந்துவிட்டது என்பதையும் நாம் ஆச்சாரியாருக்குக் கவனப்படுத்தத் தேவையில்லை. நவீன உலகத்திலே ஒரு நாடு தனித்தியங்க, அதன் நிலப்பரப்போ, ஆள் பலமோ அடிப்படைத் தேவையில்லை. டென்மார்க்கும், ஸ்வீடனும், நார்வேயும் மிகச் சிறிய நாடுகள். மக்கள் தொகையும் குறைந்த அளவில் இரண்டு கோடிக்குள்ளாகவே இருப்பவை. இருந்தாலும் இந்த நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கை வசதிகள் பிற நாடுகள் பார்த்துப் பொறாமைப்படுபவை. கட்டுப்பாடான சமூகம். கூட்டுறவு முறையிலே வர்த்தகம், உற்பத்தி, விநியோகம் எல்லாம். இந்த நாடுகளில் வாழும் மனிதர்களின் சராசரி வயது 75ஐ தாண்டும் அளவு. உயர்ந்த சுகாதார நிலை, இலக்கியம், அழகு கலைகள் எல்லாம் செழிப்போடு வளர்கின்றன. மொத்தத்தில் முன்னேறிச் செல்லும் ஐரோப்பாவிலேயே இன்னும் வளர்ந்த நிலைக்கு வந்திருக்கும் நாடுகள், ஸ்காண்டிநேவிய, டென்மார்க் நாடுகள்.

சிறிய நாடுகள் தனித்து வாழ முடியுமா என்ற கேள்வியை அரசியலில் ஈடுபட்டிருப்போர் கேட்டால், அதன் அர்த்தம் நமக்கு விளங்கவில்லை. சாம்ராஜ்யங்கள் அமைத்த

லக ஆதிபத்திய வேட்டையில்
டுபட விரும்பும் ஏகாதிபத்திய
ாதிகளுக்குத்தான், பல நாடுகளை
அடக்கிய, பெரிய நாட்டை உற்
பத்தி செய்ய எண்ணம் தோன்றும்.
னித் தனித் தேசிய இனங்களை
ட்டுப்படுத்தியாவது ஒரு நாட்டை
ற்படுத்தி அந்த செல்வாக்கில்
ாரையே ஆள ஆசைப் பிறக்கும்.
இந்த எண்ணம் அலெக்ஸாண்டர்
ாலம் முதல் இன்றுவரை சமுதா
த்தை அரித்து வரும் தொத்து
யாதி. இந்த வியாதி ஆச்சாரி
ாருக்கும் பிடித்திருந்தால், பாபம்,
ிகப் பெரிய சிம்மாசனத்திற்கு,
ிகச் சிறிய ஆளான இவர், போட்டி
பாடுகிறாரே என்றுதான் வருந்த
ரிடுகிறது.

ஏதோ ஒரு இடத்தில் கூறினாராம்
முன்பெல்லாம் ஜாதியை ஒழிக்க
ராவிட இயக்கத்தினர் விரும்பி
ர்-இப்பொழுது ஜாதியினால்தான்
ட்சியை வளர்க்கின்றனர்'' என்று.
இவர்கள் சிறையுள் வாடும்போது
க்களைத் திருப்பிவிடலாம் என்ற
ண்ணத்தில் ஆச்சாரியார் இந்த
ந்திர மொழியைப் புகன்றி
க்கலாம். ஆனால், நாட்டில் தி. மு.
செய்து வரும் அறிவுப் பிரச்சா
த்திற்கு எவ்வளவு நேர் எதிரான
ற்றச்சாட்டுகளை அவர் சுமத்தி
ருக்கிறார், என்று சிறிது யோசித்
ப் பாருங்கள்.

மனிதனுக்கு மனிதன் எந்த வித
ன பேதமுமின்றி, மூட நம்பிக்
கையையும், சுயநலத்தையும் போக்
சமுதாயத்தை, அறிவின் துணை
ாண்டு அமைக்கப் பாடுபடும்
. மு. க. வின் பேரில் மிக
பாண்டமான குற்றச்சாட்டு இது.
விலத்தை பண்படுத்தும்போது
ளியை வெட்டித்தான் எறிய
வண்டும்!

மாளிகை அமைக்க முற்பட்டால்
ட்டிச்சுவரை உடைத்தெறியத்
ன் வேண்டும்!

சமுதாயத்தை சீர்திருத்த முற்
டும்போது. மதத்தின் பெயரால்
க்களை அறியாமையில் ஆழ்த்தி,
வநம்பிக்கையில்தள்ளும் ஆதிக்க
யினரை ஒழிக்காமல் வேறு எப்
த்தான் செய்வது? ஆச்சாரியார்
தகால முறையை ஒத்துக் கொள்
ர். நாலு வருணங்கள் தேவை
ன்பவர். ஜாதி முறைகள் மக்கள்
மைக்கே என்பவர், மழைக்கு

பஜகோவிந்தத்தையும், தருமத்தை நிலை நாட்ட பகவத் கீதையையும் நாடுபவர். ஆகவே அவர், இன்றைக்கு இருக்கிற சமுதாய அமைப்பைத் தொடாமல், அரசியல், இல்லை, மதத் தொண்டு செய்யலாம். அவருடைய வாழ்க்கை இலட்சியம் கோல்தூக்கும் சங்கராச்சாரிகளை வரவேற்பதிலும், மடாதிபதிகளுக்கு ஆக்கம் தருவதிலும், சனாதனிகளுக்கு ஏற்ற வண்ணம் சட்டம் செய்வதிலும் பூர்த்தியாகிறது.

ஆனால் நாமோ, உயர்ந்த இலட்சியத்திற்குப் போராட துணிந்துவிட்டவர்கள். அவன் தவசியானாலும், தனவானானாலும், எவனாயிருந்தாலும் சரி, இன்றைக்கு இருக்கும் சமுதாய அமைப்பை உடைத்தெறிய முடிவு கட்டிப் புறப்பட்டவர்கள்.

சமுதாயத்தை மாற்றியமைக்க முயன்றால், சனாதனத்தின் மீது மோதிக் கொள்ளாமல் நாம் எப்படி தப்பமுடியும்? இன்றைக்கு இருக்கும் சமுதாய அமைப்பினால் உயர்ந்து வாழ்பவர்கள் பார்ப்பனர்கள். சமுதாயம் மாற்றியமைக்கப்பட்டால் நஷ்டமடையப் போகிறவர்களும் அவர்கள்தான். ஆகவேதான் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக் கூறினால் அவர்களுக்குக் கோபம் வருகிறது. ஜாதி ஒழிய வேண்டுமென்றால், நாத்திகர் என்று நம்மைத் தூற்றுகின்றனர். அவர்கள் தூற்றலை சமாளிக்க, நாட்டிலே இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை புள்ளி விவரங்களோடு வெளியிடுகிறோம். எந்தத் தனிப்பட்ட பார்ப்பனன் மீதும் நமக்கு வெறுப்பில்லை

—அந்தளவுக்கு மனிதாபிமானம் அற்ற ஜீவன்களல்ல நாம்! இருந்தும் பார்ப்பனர்கள் உணர்ந்து கொள்ள மறுக்கின்றனர். தேசிய ஒற்றுமை—பாரதவர்ஷ மகாத்மியம்; என்று ஏதோ ஆசை வார்த்தைகளைக் கூறி நம்மை ஜாதியவாதிகள் என்று பாடுபடுத்த விரும்புகின்றனர்.

தி. மு. க. வின் அமைப்பிலே, ஜாதீய எண்ணங் கொண்டோருக்கு இடமே கிடையாது. இன்னும் பார்க்கப் போனால் கலப்புமணம்; விதவைகள் மறுமணம் இப்படி அதற்கு நேர் எதிரான கொள்கைகளின் அடிப்படையிலேதான் நம்முடைய அரசியல் இயக்கமே நிற்கிறது. இருந்தும் நம்மை வகுப்புவாதிகளாக்கவே ஆச்சாரியார் திட்டம் போடுகிறார்.

இந்தத்திட்டம் வெற்றி பெறாது என்பதற்கு நம்மிடையே சேர்ந்து, நம்மில் ஒருவராக மாறியிருக்கும் முன்னாள் பார்ப்பன வாலிபர்கள் பலரே சாட்சியாகும். இருக்கின்ற பார்ப்பன சமுதாயம் மறைந்து கொண்டே இருக்கிறது. வருகின்ற திராவிடசமுதாயத்திலேபார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் வேற்றுமை இருக்க நியாயமே இல்லை. இந்த நம்பிக்கைதான், ஆச்சாரியாருடைய அர்த்தமற்றக் குற்ற சாட்டுகளுக்கு நாம் அஞ்சத் தேவையில்லை என்று தைரியம் கொடுக்கிறது.

முதலாளிகளை ஒழிக்க முற்படும்போது முதலாளிகள் எதிர்த்துத் தான் தீருவர்.

முதலாளிகள் எண்ணிக்கை மிகக்

ஆச்சாரியார் கண்டு பிடிப்பு!

——

தென்காசி, அக்—31.

"திராவிடர் — ஆரியர் இனப் பிரச்னையெல்லாம் பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியர்கள் செய்த வேலை. பாரத கண்டத்தில் அவ்வித பாகுபாடுகள் கிடையாது.

—ஆச்சாரியார்

ஆராய்ச்சி தெரிவிப்பது!

அகமதாபாத் அக்—31.

"திராவிடக்குழு மொழிகளின் வளமும், திராவிட கலாச்சாரமும் தொன்மையானது. அவைகளைப்பற்றிய முழு ஆராய்ச்சியையும் இன்னும் சரிவரச் செய்யப்படவில்லை. இந்த நோக்கத்துடனேயே, சென்னை சர்வகலாசாலையில் திராவிட ஆராய்ச்சிப் பகுதி ஒன்றை ஆரம்பிக்கப்போகிறோம்!

—மகாலிங்கம்.

சென்னை சர்வ கலாசாலை,
பேராசிரியர்.

கொஞ்சம் தான். இருந்தும் தங்களுடைய உரிமையை கடைசிவரை அவர்கள் விட்டுக் கொடுப்பதில்லை. அங்கும் தனிப்பட்ட முதலாளிகளை யாரும் வெறுப்பதில்லை. "தேசபக்த முதலாளிகள்" "மனம்மாறிய முதலாளிகள்" என்று பலபாகுபாடுகள் ஏற்படுத்தி சிலரை ஆதரிக்கவும் நேர்கிறது! முதலாளிகளின் சொத்துகள் பொதுவுடைமையாக்கப்பட்டவுடன், அவர்களும் சமுதாயத்தில் ஒருவராகி விடுகின்றனர். இதே முறையில்தான் பார்ப்பனர்களும் புரட்சியில் பூக்கும் சமுதாயத்தில் வெறும் மனிதராகவே வெளிவருவர்—தேவபுருஷர்களாக அல்ல! தங்களுக்கு இருக்கும் ஆதிபத்திய வாழ்வை சுலபத்தில் விட்டுக் கொடுக்க யாரும் விரும்ப மாட்டார்கள். தாழ்த்தப்பட்டிருக்கும் மக்கள் போராடிதான் சம உரிமையைப் பெற முடியும். மனித சமுதாயத்தின் நல் வாழ்விற்கு அவசியமான இந்த பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும், நம்மீது சாட்டப்படும் அர்த்தமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு நாம் பயப்படத் தேவையில்லை. பொருளாதாரத்துறையிலே முதலாளி வர்க்கத்தை எதிர்ப்பதும், சமுதாயத்துறையிலே பார்ப்பனீயத்தை எதிர்ப்பதும் பெருமையோடு செய்ய வேண்டிய வேலையாகும். இந்த மனிதப் பண்பாட்டோடு கூடிய வேலையை, ஆச்சாரியார் திரித்துக் கூற முற்பட்டால், அது ஆச்சரியப் படுவதற்குரியதில்லை. அவர் கொண்டிருக்கும் பெரும்பணியே, சனாதனத்தைக் காப்பாற்றுவதுதான் என்பதை ஞாபகத்தில் கொண்டு பார்த்தால், ஆச்சாரியாரின் உண்மை நோக்கம் தெரியும்.

பார்ப்பனர்களின் உண்மைப்பாதுகாவலனாக இருக்கும் ஆச்சாரியார், "திராவிடநாடு கிடைத்தவுடன், பார்ப்பனர்களை என்ன செய்யப் போகிறீர்கள்; வெளியே அனுப்பி விடுவார்களா?" என்று கிண்டல் கூட பேசினாராம். இந்த இயக்கத்தை கொஞ்சமல்ல—அதிகமான ஜாக்கிரதையோடு கவனியுங்கள் என்று பார்ப்பனர்களைக் கூவி அழைக்கிறார், ஆச்சாரியார். இதுதான் இந்த அறிவு சூன்யமான வார்த்தைகளின் உண்மைப் பொருள். திராவிடநாட்டிலே பார்ப்பனர்களின் நிலை என்ன என்று ஆராய என்ன தேவை ஏற்பட்டது, ஆச்சாரியாருக்கு.

பேதாபேதமற்ற சமுதாயம் தான் திராவிடத்தில் திகழும் என்றால், அதில் சமதர்ம நோக்கம் கொண்ட மனிதன் எவனுக்கும் இடமுண்டு என்று தானே அர்த்தம். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால், வருகின்ற திராவிடத்திலே பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் பிரிவை ஒழிக்கத்தான் இன்று முதலே, இந்தபெரும் போராட்டத்தை நடத்துகிறோம். இந்த சமதர்மநிலையை ஒத்துக்கொள்ள இன்று மேல் நிலையிலிருப்பவர்கள், மறுப்பர். அதற்காக அவர்களைப்பார்த்து பரிதாபப்படுகிறோம்.

நூற்றுக்கு மூன்றுபேராக இருக்கும் பார்ப்பனர் ஏன் பள்ளிகளை நிரப்புகின்றனர்; ஆபிஸ்களில் அரியாசனம் வகிக்கின்றனர்; சமுதாயத்தின் பொருளாதாரப் பிடியை கைபற்றினர் என்று நாட்டில் இன்றிருக்கும் பேதாபேதமான நிலையை விளக்கி, இருக்கின்ற வசதிகளை நாட்டு மக்கள் எல்லோரும் பகிர்ந்து கொள்வோம் என்று கூறினால், அது வகுப்புவாதம்! பார்ப்பன சமூகத்தின் நல்வாழ்வைக் குறைக்க வேண்டாம்—ஆனால், அதே சமயத்தில் பார்ப்பனரல்லாதாரின் நல்வாழ்வு உயர வேண்டும்—அதற்கு வழி என்ன என்றால், அது வகுப்புவாதம்! மனிதனுக்கு மனிதன் வித்தியாசமில்லை — ஆகவே ஏனப்பா இன்னும் நாலு வருணம் என்றால் அதுவகுப்புவாதம்! இந்த மாதிரி நாம் வகுப்புவாதிகளாக்கப் பட்டால் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை, ஆனால் ஆச்சாரியார் ஏன் இந்தக் குற்றச்சாட்டுகளைக் கூறுகிறார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

நாட்டிலே இன்றைக்கிருக்கும் முதியோர் கூட்டம் வைதீகப் பிடியிலிருக்கிறது. முதலாளித்துவம் வைதீகத்திடம் அடைக்கலமாகி இருக்கிறது. இந்தநேரத்திலே இந்த சனாதனக் கூட்டங்களைப்பற்றி கவலைப்படக்கூட சக்தியின்றி வறுமை வாழ்க்கையில் வதிகின்றனர், நாட்டு மக்கள். அவர்களுக்கு அறிவுக் கண்ணைத்திறக்க அரசாங்கம் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஆச்சாரியார் தன்னுடைய வைதீக கொள்கையைத் தந்திரமாக பயன்படுத்துகிறார்.

முதலாளித்துவத்திற்கும், சனாதனத்திற்கும் சரியான பாதுகாவல் புரிய முன்வருகிறார். அறியாமையிலும், வறுமையிலும் வாழும்மக்களை ஏமாற்ற, ஆச்சாரியார்பஜகோவிந்தப் பிரச்சாரம் செய்கிறார்.

இப்படிச் சேர்த்த பலத்தை வைத்துக் கொண்டு தன் கட்சிக்குள் ஏற்படும் பதவிப் போட்டியையும், நம்மையும் சமாளிக்கப் பார்க்கிறார். எப்படியோ தானே பதவியில் நீடித்து இருக்க வேண்டும். கடைசி வரை இந்த வர்ணாச்சிரமத்திற்குத் தொண்டு செய்யவேண்டும். இது ஆச்சாரியார் பாதை.

இப்படிப்பட்ட பயங்கரமானத் திட்டத்தை உடைத்தெறிய நாம் ஆச்சாரியாரிடம் போய் மோதி பிரயோசனமில்லை — அரசியல் அகராதிப்படி மிகத் தவறானதும்கூட.

எந்த மக்களை ஏமாற்ற ராஜகோபாலாச்சாரி முற்படுகிறாரோ, அதே மக்களிடம் நாமும் செல்வோம், அறிவு விளக்கேந்தி.

மக்கள் அறிவியக்கத்தின் பக்கம் தான் என்றும் சேருவர். சனாதனிகள் அழிந்து போவர், இது தான் வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம்.

நம் உழைப்பின் அளவு அதிகமாக வேண்டும் — ராஜாகோபாலாச்சாரிகள் தோன்றும்போது. அதுதான் அவர்களை ஒழிக்கும் வழி.

உலகம் முன்னேறுகிறதே ஒழிய பின்னால் செல்லவில்லை. ஒரு ராஜ கோபாலாச்சாரி அல்ல ஆயிரம் ராஜ கோபாலாச்சாரிகளால்கூட அறிவுப் புரட்சியை அடக்க முடியாது.

நாம் விடிவெள்ளி கண்டு புறப்பட்டிருக்கிறோம்.

அவர் கருப்புக் கண்ணாடி போட்டிருக்கும் காரணத்தால் இருளில் புறப்பட்டிருக்கிறார்.

நாம் வருகின்ற திராவிடத்தி[illegible] யடிக்கற்கள்.

அவர் மறைகின்ற பாரதத்தின் கடைசிப் பிரதிநிதி!

✱

கண்ணீர்க் கடலில்--அதிகாரக் கப்பல்!

ஆத்திரக்காரர் ஆட்டிப்படைக்கிறார்

கதிரோன் வருவான்! காரிருள் நீங்கும்!!

"அவர்கள் பத்திரிகைகளை நான் டிக்கும்போது எனக்கு ஆச்சரியம் ப்படுகிறது 'தலைவர்களை' இவர் றையில் போட்டுவிட்டார்! என் னார்கள். இது ஒரு கிளர்ச்சி. அவர் ள நானா சிறையில் வைத்தது? நியாயஸ்தலத்தில் வழக்கு நடந் து. 10 தினங்கள் பேசினார்கள். க்கார் தரப்பில் சொன்னதைவிட கம் பேசினார்கள், மாஜிஸ்திரேட் 500 அபராதம் விதித்தார். றைக்கு வேண்டாம், அபராதம், திக்கிறேன். என்பது மாஜிஸ் ரேட் தீர்ப்பு ஆனால், சிறைக்குத் ன் போவேன்' என்று போனார் . மாஜிஸ்டிரேட், அவர்களை றைக்கு அனுப்பவில்லை. நானும் அனுப்பவில்லை. அவர்களே அவர் அனுப்பிக்கொண்டார்கள். னயே அவர்கள் வெளியில் வந்து லாம். சர்க்கார் செய்தது தட்பு னால், அப்பீல் செய்யலாம். நிலை படி இருக்க யாரோ சிறையில் ர்களை தள்ளிவிட்டதாகத் திரித் கூறி குழந்தைகளை என்னிடம் ராதம் கொள்ளச் செய்வது சரி ல."

சப். 19ந் தேதி 'தினமணி' ழை எடுத்துப் பாருங்கள்! திரு ற்றியூரில், திருவாளர் ஆச்சாரி அவர்கள் பேசிய பேச்சு வந் க்கிறது—அதில், சிறு துண்டு, இருப்பது.

லைவர்களைச் சிறையில் அடைத் கண்டு, தாயகம் கொதித்துக் ண்டிருந்தபோது, இத்தயாளர் ரியிட்ட சொற்கள், இவை.

க்கள் குமுறினர், 'அக்கிரம ாரே! எம்மருந் தலைவர்களை சித்ரவதைக்கேன் ஆளாக்கி , என்று. மக்களின் விழிகளில் இல்லாத நேரம்! மொழிகளில் ரமும் ஆவேசமும் கலந் த வேளை! அரசியல் மேடை களின் அருமைபெருமைதெரிந்தோ ரிடைமட்டுமல்ல, குக்கிராமவாசி களிடமும் இந்தக் குமுறலைக் கண் டோம். சாதாரண வீட்டுத்திண்ணை களிலும் இந்தச் சஞ்சலம் தென் பட்டது.

"என்னய்யா அக்கிரமம்! இந்த ராசகோபாலாச்சாரி, துப்பாக்கி யால் சுட்டுப் போட்டதுமல்லாமல், அண்ணாதுரையையும் அவருடைய கூட்டாளிகளையும், அடைத்துவிட் டாராமே, சிறையில்?"

"ஏனய்யா! அவர்கள் என்ன குற் றம் செய்தார்கள்? திருடினார்களா? தீயிட்டார்களா? கத்தி தீட்டினார் களா? கலவரத்தைச் சிருஷ்டித்தார் களா?—இதெல்லாம் அவர்களுக்குச் சிறிதுகூடத் தெரியாதே"

"விஷயங்களை விளக்கி, மக்கள் மனதில், அறிவு புரண்டோடச் செய்யும் நல்லவர்களாயிற்றே. ஏன் இப்படி, இந்த ராசகோபாலாச்சாரி, அவர்கள்மீது பாய்கிறார்."

"கருணாநிதிக்கு ஆறுமாதம்! அண்ணாதுரைக்கும், மதியழகன்—நெஞ்செழியன்—சம்பத்—நடராச னுக்கும் மூன்று மாதமாம்!!"

"அதுமட்டுமா? துப்பாக்கிக் குண்டுக்குத் தமது தோழர்களைப் பலிகொடுத்தார்களே தூத்துக்குடி நகரத் தோழர்கள் சிவசாமி, தங்கப் பழம், சாமி, நடராசன், ரத்னம், அவர்கள்மீது கடுமையான வழக் காமே!"

"ஐயோ! இன்னும் கேள், அண்ணே. உதை உதையென்று உதைத்து, மண்ணில் போட்டு மிதித்தார்களே கண்ணதாசனை, அவர்மீதும் அம்பில் தர்மலிங்கம் போன்றார்மீதும் 'கேஸ்' போட்டி ருக்கிறாரய்யா, இந்த ஆச்சாரியார்?"

"செச்சே! நானும் பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன். இந்த ராஜகோபாலாச்சாரி, எப்பொழுது, மந்திரியாக வந்தாலும், அவர்களைத் தீர்த்துக்கட்டத்தான், துடிக்கிறார்"

"எறும்பு புற்றெடுக்க எங்கி ருந்தோ வந்த கருநாகம் புகுந்து கலாட்டாசெய்யும் கதையாகத்தான் இருக்கு."

"தேசம், ரொம்ப மோசமாப் போயிட்டுது! நல்லவனுக்கு கால மில்லே — பொல்லாதவனும் போக் கிரியும் கொடிகட்டிப் பறக்கிறான்."

இவ்வண்ணம் சென்னை மாநி லத்து மக்களின் இல்லங்களிலெல் லாம், நிகழ்ந்த உரையாடல்களை, அறிவர், மக்கள். குழந்தைமீது ஆசைகொண்ட தாயும், கணவனு டன் காதலுரை பேசிடும் மனைவியும் நண்பர்களோடு உரையாடும் தோழ ரும், நல்லிளம் மாணாக்கரும், காடு களைந்து நாடு திருத்தி கஷ்டப்பட்டு வாழும் தொழிலாளத் தோழரும், குழந்தைகளின் அருமை பெருமை யுணர்ந்த பெற்றோரும், பூமித்தாய் தந்த பொன்னரிசியால் சமைத்த வெண்ணிலாச் சோற்றை கிண்ணத் திலிட்டு பச்சிளங் குழந்தைகளின் அமுதவாய்க்கு ஊட்டிடும் அன்னை யரும், அண்ணாவும் பிறரும் சிறைச் சாலைக்குள் கிடப்பதைப்பற்றி சிந்தி யாத நேரம் கிடையாது. காதலி மடித்துத் தரும் வெற்றிலைப் பாக் கினைக் கையேந்தி வாங்கும் கணவன் கண்களில், அண்ணாவின் உருவம், வரும்! 'இன்னேரம் எம் அண்ணா எப்படியிருக்கிறாரோ! வெற்றிலை யென்றால் உயிராச்சே, அவருக்கு. என்ன செய்கிறாரோ?' என்று ஒரு நிமிடம், அவன் எண்ணமலிரான. செந்தமிழ்க் கல்லூரிகளில் தமிழ்ப் பண்டிதர். தீந்தமிழ்க் கவிதையேட் டைப் பிரித்து, பாடலைவாசிக்கும் போதும் அதனை மாணவர் குழாம் செவிமடுக்கும்போதும் 'மாண்ட தமி ழர் வீரம் மீண்டதுபோல் உலவி னாரே, நெடுஞ்செழியன், அவர், எங்கே? அவர் எவ்வளவு அழகாக இந்தப் பாடல்களைச் செப்புவார்!' எனறெண்ணம், அலைமோதும். நாடெங்கும் சென்று இஷ்டம் போல் பேசும் இந்த தேசிடக் கூட் டத்தின் குரல் ஒலியைக் கேட்கும் போது, 'ஐயோ! எவ்வளவு அருமை யாக், எடுத்த விஷயத்தை விளக்கு

வார். அந்த அருமை சம்பத், தன் குரலை அடக்கியவண்ணம் எப்படிக் கிடக்கிறாரோ, வெஞ்சிறையில்?" என்று எண்ணம் பளிச்சிடும்—பதறச்செய்யும். மாணவர்களும் கழகத் தோழரும் "அந்தக் கட்டிளங்காளை மதியழகனிருந்தால், எவ்வளவு கலகலப்பாக இருக்கும்? புன்சிரிப்போடு, சிந்தனையுரையைத் தெளிப்பாரே! எப்படியிருக்கிறாரோ?" என்று ஏங்காமலிரார். வாரம் தோறும் செல்லும் 'திராவிடன்' இதழைக் காணும்போதெல்லாம், ஏழையுலகின் கண்களில், அந்த எளிய உருவம் என். வி. நடராசன் தென்படுவார்! எப்படியிருக்கிறாரோ, நடராசன்!" என்று எண்ணாமலிரார். எழுத எடுக்கும் பேனாவையும், வீதியில் தென்படும் சினிமாத் தாள்களையும் காணும்போது, "கருணாநிதி இல்லையே—அவர் சொல்கேட்கும் நிலையில்லையே" எனும் ஏக்கப்பெருமூச்சிலிருந்து நாடு வளரப் பாடுபடுவோர், வகை எண்ணவே செய்வர். இத்தகைய நிலையிலிருந்து வருகிறது தாபகம்.

"என்று வெளிவருகிறார், அண்ணா?"—ஏக்கம் கலந்த குரலில் கேட்கிறார்கள், தோழர்கள். எதிரே மாட்டப்பட்டிருக்கும் அவரது படத்தைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறியும் குடும்பங்கள் ஏராளம்! அரசியல் உலகில் அந்தகாரம் சூழ்ந்திருக்கும் இந்நேரத்தில் அவரிருந்தால், எப்படியிருக்கும்?—என்றெண்ணும் மாற்றுக்கட்சிக்காரர்கள், பலருண்டு. இவ்வண்ணம் நெஞ்சம் துடிக்க, நினைவெல்லாம் கண்ணீரால் நனைய, சிறைக் கதவுகளை ஒரு கண்ணாலும், நாட்டைத் தன் களிநடனக் காடாகக் கருதும் ஆச்சாரியாரை மற்றொரு கண்ணாலும் பார்த்தபடி பெருமூச்செறியும் மக்களைப் பார்த்துத்தான், ஆச்சாரியார் கேட்டார்.

"நானா போகச் சொன்னேன்?"—அவர், இவ்விதம் கேட்டதும், அவரது அந்துபிகள் முழங்கின, தினசரி. எமது ஆச்சாரியாரா போலீஸ்காரராகி, அண்ணாவையும் பிறரையும் இழுத்துச் சிறைக்குள் தள்ளினர், என்று.

"நீதி, நியாயஸ்தலமன்றோ, தீர்ப்பு தந்தது!"—இவ்விதம் கூறியதைக் கண்டதும், சிலர், 'சட்டப்படிதானே ஆச்சாரியார் செய்திருக்கிறார்' என்று பேசினர். ஆச்சாரியாருடைய அட்டகாசம் தென்பட்டாலும், இந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுவதென்று திகைத்தனர்.

"நாளையே அவர்கள் வெளியில் வந்துவிடலாம்!" — இவ்விதம் ஆச்சாரியார் மொழிந்ததும், தலைவர்களில்லையே எனும் தாளாத்துயரத்தில் மூழ்கிக் கிடந்தோரெல்லாம், சிறிது நம்பிக்கை ஒளி பெற்று, வெளியில் வரும் தேதியை விரலில் வைத்து எண்ணத் தலைப்பட்டனர்.

'கோர்ட் விவகாரங்களில் அதிகாரிகள் பிரவேசிக்கக்கூடாதென சட்டம் ஏற்படுத்தப்பட்டு அதன்படி நடந்து வருகிறது இந்த நிலையில் வெறும் கூப்பாடு கோஷங்களைக் கண்டு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது" (தி. ம. செப். 19) இவ்விதம் அவர் பேசியதைக் கண்டதும், ஆச்சாரியார் எவ்வளவு அகாரிகமாக நடந்துகொண்டாலும் சட்டத்தை கேவலமாக நினைக்கும்கெடுமதிக்காரராகவில்லை. அதனை மதிக்கிறார்—அதற்குள்ள மரியாதையை நிலைநாட்டத் தவறார் — என்றே எண்ணினர்.

"தண்டனை அதிகமென்றால் அப்பீல் செய்து கொள்ளலாமே!" இவ்விதம் ஆச்சாரியார் தெரிவித்தபோது, "தண்டித்தது மாஜிஸ்திரேட்—ஆகவே தண்டனை அளித்திருக்கிறார். சர்க்கார் என்ன செய்ய முடியும்? தண்டனையைக் குறைப்பது சர்க்கார் கையில் இல்லையே! ஆகவே இந்த யோசனையை நமக்கு, கூறுகிறார்போலும் 'அப்பீல்செய்து கொண்டு பாருங்களேன்' என்று தலைவர்களில்லாமல், தவிக்கும் மக்களைப் பார்த்து ஆலோசனை கூறுகிறார்போலும் என்றுகூட எண்ணியோர் உண்டு.

அந்தளவுக்குப் பாசம் — மனித உணர்ச்சி — சட்டத்தை மதிக்கும் மனப்பாங்கு—இவைகளை இரு திங்களுக்கு முன்பு, வெளியிட்ட ஆச்சாரியார், தன அதிகார அம்புகள்மூலம், தன்னுடைய 'நரிவேலை'யில் ஈடுபட்டிருக்கிறார். தலைவர்களை எண்ணி, அவர்களின் விடுதலைத் தேதியை விரலில் வைத்தபடி இருக்கும் நமது ஆசைக்கு அணைபோட விரும்புகிறார். ஒளியில்லாத வானத்தில் என்று வரும் வெண்ணிலா?—என்று ஏங்கியிருக்கும் தாயகத்து மக்களின் ஆர்வத்தில், மண்ணைப் போட முயல்கிறார். குடும்பங்களில் அன்றன்றாடம் சிந்தப்படும் கண்ணீர்த் துளிகளைச் சேர்த்து கடலாக்கி, அங்கே தனது அதிகாரக் கப்பல் மிதக்க, அடிவருடிகள் 'லாலி' பாட, ஆனந்த சயனம் கொள்ள ஆவல் கொள்கிறார், உருண்டுகொண்டிருக்கும் தனது உல்லாச ஓடம் அறிவுப் புயலால், கவிழ்ந்துவிடுமோ எனும் அச்சத்தால் சட்டத்தின் சந்துபொந்துகளிலெல்லாம்—நுழைகிறார்—தேடுகிறார்.

கதிரோன் வந்தால் காரியம் கெட்டுவிடுமே! என்று கள்ளர்கள் தான், கிலி கொள்வர்.

ஆனால், நம்முடைய தலைவர்கள் வெளியில் வந்தால், தன்வெறியாட்டத்தைத் தொடர்ந்து நடத்தமுடியாதென பயப்படுகிறார். இந்தப் பயத்தின் விளைவாக, பயங்கரமான பாதை புகுகிறார்!

ஆசை வெட்கம் அறியாது—என்பார்கள்.

ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு —என்றோர், பழமொழியும் உண்டு.

இந்த இரண்டு முதுமொழிகளின் நடமாடும் சித்திரமாகி இருக்கிறார், அன்பர் ஆச்சாரியார்.

அரசியலில் இந்த ஆத்திரக்காரர் தலையிட்டது முதல், விளைந்த விபரீதங்களை, நாடு அறியும். ஆச்சாரியார் நம்மீது கொண்ட ஆத்திரம் காரணமாகச் செய்துவரும் அடாபிடிகளை, உலகம், வியப்புக் கண்களோடு பார்த்தபடி இருக்கிறது.

ஒரு தனி நபர், ஆச்சாரியார். ஆனால், அவருடைய ஆத்திரபுத்தி காரணமாக, ஆறு உயிர்கள், தமிழகத்தின் மடியிலிருந்து பிரிக்கப்பட்டன! நூற்றுக்கணக்கானோர் கையிருந்தும் வாழ முடியாதவர்களாய், காலிருந்தும் உழைக்க முடியாதவர்களாய் செய்திருக்கிறது! தோழர் கருப்பையாவின் உயிரைக் குடித்திருக்கிறது! ஆயிரக்கணக்கான இல்லங்களில் கன்னியர்குமுறவும், எதிர்காலச் செல்வங்களாம் சின்னஞ்சிறு குழந்தைகள், 'அப்பா! அப்பா!' என்று கதறும்படியான நிலைமையும் ஏற்பட்டது.

தாமரைக் குளத்தில் எருமை புகுந்து அலைக்கழித்ததைப் போல,

அமைதியும் சாந்தமும் தவழ்ந்து கிடந்த தாயகத்தில், இவர் புகுந்தார்.

'இதோ, கல்வித்திட்டம்!'—என்றார். இல்லாத சூழ்நிலைகளையெல்லாம், சிருஷ்டித்தார். பசித்தவன், வயிற்றைக் காட்டினான்—'பஜகோவிந்தம் பாடு!' என்றார். அனுதினமும் பாதாமும் பாலும், பழரசமும் பருகும் வாய்ப்பு தனக்கிருக்கிறது எனும் கர்வத்தில். தறிகாரர்களின் குரல், 'தஞ்சமய்யா, தஞ்சம்!' என்று ஒலித்தது. தாறுமாறான பேச்சுக்களோடு காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார். சர்க்காரின் 'கஜானா'—திறந்துவிடப்பட்டிருக்கிறது, தன் எடுபிடிகளுக்கு. தன்னுடைய அதிகார பீடத்தின் அஸ்திவாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்காக, இஷ்டம்போல் மந்திரிகளை, நியமித்துக் கொண்டிருக்கிறார். நான்கு கோடி மக்கள்! அவர்களை ஆளும் அமைச்சர், இவர்!! இந்த நான்குகோடி மக்களையும் பார்த்து, எங்கேயோ இருக்கும் நேரு பண்டிதர், 'முட்டாள்கள்!', என்றார். தன் நிலத்து மக்களைத் தருக்கோடு பேசிய, டில்லித் தலைவரை, எதிர்த்தோ — நயமாகச் சொல்லியோ — தவறை உணர்த்த விருப்பமில்லை, இத்தயாபர். மாறாக, அவரை இட்டு வந்து, இந்நாட்டு மக்களுக்கெல்லாம், 'காட்டுமிராண்டி' பட்டம் வாங்கித் தந்திருக்கிறார்! இதனை எதிர்ப்போரையெல்லாம் வாய்க்கு வந்தபடி பேசித் திரிகிறார்! இத்தகைய, ஜனநாயக விரோதி, சமுதாயத் துரோகி, சனாதனச் சிலந்தி, இன்று நம்முடைய தலைவர்கள், 'வெளியில் உலவுவதே ஆபத்து', என்று எண்ணுகிறார். அவருடைய கண்களில், குமுறும் குடும்பங்கள் தென்படவில்லை — கதறும் குழந்தைகள் காட்சி தரவில்லை—நாட்டின் மானபிமானம் தோன்றவில்லை—நலியும் மக்கள் வாழ்வுபற்றிய கவலை அரும்பவில்லை ஆனால், நம்முடைய தலைவர்களைப் பழிவாங்கும் கொடூர சுபாவ மட்டும், கூத்தாடுகிறது!

நாம், தவிக்கிறோம்—அவர், சிரிக்கிறார்.

நமது தலைவர்கள் விரைவில் வெளியில் வருவர் — நாம், எதிர்பார்த்தபடி இருக்கிறோம், அவர், 'விடுவேனா, பார்!', என்று வீம்புக் குரல் எழுப்புகிறார்.

இதன் விளைவாக, இந்த வாரம், சென்னை உயர்நீதி மன்றத்தில், ஆச்சாரியாரைத் தலைவராகக் கொண்டிருக்கும் அரசாங்கம், "அப்பீல்" செய்திருக்கிறது.

சாதாரணமாக, ஐகோர்ட் அப்பீல் என்றால், தண்டனையை எதிர்த்தே செய்யப்படும்.

தண்டனையடைந்தோர், தமது தண்டனையைக் குறைத்துக் கொள்ளவே 'அப்பீல்' செய்வர்.

ஆனால், இப்போது, தண்டனை பெற்றோர், சிறையில் கிடக்கிறார்கள்.

தண்டனை பெறச் செய்த அரசாங்கம், 'அப்பீல்' செய்கிறது — அதன் மூலம் அதிகத் தண்டனையை வாங்கித்தர வேண்டுமென்று, ஆசைப்படுகிறது.

நீதியின் தராசுக்கு, மதிப்புக் கொடுப்போர் நாம். அது, தன்னுடைய வேலையைச் சரியாகச் செய்யும் எனும், நம்பிக்கையும் நமக்குண்டு.

ஆனால், அந்த நீதிமன்றத்தை நோக்கி, ஆத்திரக்காரர் ஓடுகிறார்—அதிகத் தண்டனை வாங்கித் தரும் ஆசையோடு.

தலைவர்கள் பெற்ற தண்டனை போதாதாம்!

அவர்கள் குற்றத்துக்குத் தக்கபடி மாகாண மாஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்கவில்லையாம்!!

விசித்திரமான விளக்கம். அரசியல் வழக்குகளில் இந்த அதிசயத்தைக் கண்டிருக்கமுடியாது. ஆங்கிலேயன் அந்நியன் — அக்கிரமக்காரன். அவனுடைய காலத்திலும், இந்தக் கன்றாவிக் கோலத்தைக்கண்

(10-ம் பக்கம் பார்க்க)

தேவ - அசுரர்கள்!

'தினசரி' டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட. 'ஜனயுகம்' ஏடு கடந்த 29—9—53 அன்று தீட்டிய தலையங்கப் பகுதி:-

திராவிட முன்னேற்ற கழகத் தலைவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, அதை கட்டாததால் அவர்கள் சிறையில் இருப்பதை நண்பர்கள் அறிவார்கள். இதைப்பற்றி ராஜாஜி பேசியபோது "நான் அவர்களை சிறையில் போட்டதாக அந்த கட்சியார் சொல்லுகிறார்கள் நானா போட்டேன்? கோர்ட்டார் அபராதம் விதித்தார்கள். அதற்கு நான் எப்படி பொறுப்பு?" என்று சில சட்ட நுணுக்கங்களை வெளியிட்டார். அவர் சொன்ன விஷயங்கள் வரை சரி. ஆனால் சொல்லாத விஷயங்கள் சில இருக்கின்றன. முதலில் ஸ்ரீ அண்ணாத்துரை கோஷ்டிமீது நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்காரிடம் அநுமதி கேட்டே போலீசார் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இதை ராஜாஜி மறுக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. அப்படியானால், "இப்பொழுது உள்ள கேள்வி ஒன்றே ஒன்று தான். அதாவது ஸ்ரீ அண்ணாத்துரை கோஷ்டிமீது நடவடிக்கை எடுக்கும்படி சர்க்கார் ஏன் அநுமதி கொடுத்தார்கள்? ரயில் வண்டிகளில் சங்கிலியை பிடித்திழுத்து ரயில் வண்டிகளை நிறுத்தும்படி தூண்டுவது சட்ட விரோதமல்லவா, அதை பார்த்துக்கொண்டு சர்க்கார் சும்மா இருக்க முடியுமா என்று ராஜாஜி கேட்கலாம். உண்மைதான். தமிழரசு கழகத்தாரும் இதே வேலையைத் தானே செய்தார்கள்? அவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? ஒரு காரியம் சட்டவிரோதம்? என்றால் அதை யார் செய்தாலும் சட்டவிரோதம் என்றும், தமிழரசு கழகம் செய்தால் சட்ட விரோதம் அல்லவென்றும் சட்ட மேதாவியான ராஜாஜி கூட சொல்ல முடியாது. அப்படியானால் தமிழரசு கழகம் மீது எடுக்காத நடவடிக்கையை திராவிட முன்னேற்ற கழகத்தின் மீது எடுக்க வேண்டிய காரணம் என்ன? காரணம் ஒன்றே ஒன்று தான் இருக்க முடியும். தமிழரசு கழகத்தை ராஜாஜி வெறுக்கிறார். அதனால்தான் ஸ்ரீ அண்ணாத்துரை கோஷ்டிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆகவே ஸ்ரீ அண்ணாத்துரை கோஷ்டியாரை ராஜாஜி ஜெயிலில் போட்டுவிட்டார் என்று திராவிட முன்னேற்ற கழகத்தார் சொல்லுவதில் தவறு என்ன இருக்கிறது?

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 15—11—53 [ஞாயிறு

வந்தார்! போனார்!!

★

லால் பகதூர் சாஸ்திரி—மிராளாதீர்கள்!—இந்திய ரயில்வே மந்திரியின் பெயர், அது. காங்கிரஸ் ஆட்சியில், மந்திரி சபையே, ஒரு 'குட்டி முனிசிபாலிடியாக'க் காட்சியளிப்பதால், இந்தப் பெயரினை அறிமுகம் செய்யவேண்டியவர்களானோம். அவர், இந்த வாரம், சென்னை மாநிலத்துக்கு வந்தார்! திருச்செங்கோட்டில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார்—சில இடங்களில் வாழ்த்துப் பெற்றார்—சென்றுவிட்டார்.

வருவதும் போவதும், காங்கிரஸ் மந்திரிமார்களுக்கு ஓர் பொழுதுபோக்கு. இப்படி 'வந்து போவதால்' கணக்கேட்டில் புள்ளி அதிகமாகும் அதனாலேயே, அவர்கள் அடிக்கடி ஆங்காங்கும் 'வரவு' காட்டிச் செல்வார்கள். எனவே, அவர் வந்ததிலும் வியப்பில்லை! சென்றதிலும் திகைப்பில்லை!!

ஆனால், அங்ஙனம் வந்து சென்றவர், தான் செய்யப்போவதாக சில புது அம்சங்களை வெளியிட்டுச் சென்றிருக்கிறார். இதனைப் பூரிப்புடன் வெளியிட்டு, பெருமிதமுரசு கொட்டுகின்றன, தேசிய ஏடுகள், ஏழை மகன், இரயிலேறத் தவிக்கிறான். அவன் குரல் வளையை நெருக்கி, காசைப் பறிக்கும் இந்த இலாகா, இதுபோலச் சிலப் புதுக் காரியங்களைச் செய்வதாகவாவது கூறிடத்தான் வேண்டும். கூறாவிடில், இதற்கென்று கடன்தரும் அமெரிக்காக்காரன், ஏளனம் செய்வானே! — எனவே, சொன்னார்—போனார்.

லால்பகதூர் சாஸ்திரியிடம்தான் நமது சென்னை மாநில பார்லிமெண்டு உறுப்பினர்கள், 'கல்லக்குடி' பற்றிய மகஜர் நீட்டினார்கள்—டில்லியில். அந்த விஷயம் குறித்து அமைச்சர், வாயும் திறக்கவில்லை! விபரமும் கேட்டதாகத் தெரியவில்லை!!

'டால்மியாபுரம்' எனும் பெயரை மாற்றி 'கல்லக்குடி' எனும் தீந்தமிழ் பெயரை இடுமாறு கோரி, கடந்த நான்குமாதங்களாக, அறப்போர், நடைபெற்று வருகிறது. நான்கு மாதங்கள்!—வெய்யில்காய்ந்தாலும், மழை பெய்தாலும், அறப்போர் வீரர்கள் செல்கிறார்கள்—தமிழ்ப் பெயரை ஒட்டிவிட்டுத் திரும்புகிறார்கள். எடுத்த காரியத்தை — தொடர்ந்து செய்தபடி இருக்கிறார்கள். இந்த அறப்போர், நான்கு மாதங்களாக நடைபெற்று வருகிறது. மாதம், நான்கு! நாட்கள் 130!! இதனால் சிந்திய இரத்தமும் ஏராளம். சிறையில் கிடப்போரும், வழக்கு மன்றத்தில் நிற்போரும் இருக்கிறார்கள். அகில உலகும், அங்கே நடைபெற்ற அக்கிரமங்களைக் கண்டு, சிரித்தது!

நான்கு மாதங்களாக, கல்லக்குடியில் நடைபெறும் அறப்போர்ச் செய்திகளை தேசிய ஏடுகள், இருட்டடிப்பு செய்தே, வருகின்றன. இதனால், அந்தப்போரின் விளைவுகள், அரசுபீடத்துக்கு எட்டாமலில்லை! அனுதினமும் போலீசார் மூலம், செய்தி சென்று கொண்டுதானிருக்கிறது!!

ஆனால், அமைச்சர் லால்பகதூரோ, அதைப்பற்றி சிறு குறிப்பும் தரவில்லை. வந்தார்! சென்றார்!!

இந்திய பூபாகத்தின் ஒரு மூலையில், நான்குமாதகாலமாக நடைபெறும், ஒரு அறப்போரினைப் பற்றி அறிந்தும் — அதனை அலட்சியப்படுத்துகிறார், அமைச்சர். இதுவே, அமைச்சர் பதவிக்கென, காங்கிரஸ் வரையறுத்திருக்கும் இலட்சணம்போலும். அதனால்தான், அதனைக் குறித்து எதுவும் பேசாது, சென்றிருக்கிறார். இவர், அமைச்சர்! இவர் அமர்ந்திருக்கும் டில்லி, நம் 'தலைவிதி'யை நிர்ணயிக்கும் இடம்!!

எவ்வளவு வேதனையான விசித்திரம்.

—[வீரன் பேட்டி]—

'அந்தக் குரங்கு!'

[அண்ணல்]

''கண்டேன், குரங்கை!''—என்று கூவிக்கொண்டே வந்தான், வீரன்.

''குரங்கென்ன, ஒரு அதிசயப் பொருளா, வீரா?''

''ஆமாம்! நான் கண்டது, அதிசயக் குரங்கு. இது, பேசும்; நடக்கும்; எல்லாம் செய்யும்''

''எங்கேயப்பா பார்த்தாய், அப்படிப்பட்ட குரங்கை?''

''ஆச்சாரியாரிடம்தான்!''

''வீரா! ஆரம்பித்துவிட்டாயே—உன் அதிகப்பிரசங்கத்தை''—என்று அதட்டினேன். வீரன், ஒரு குறும்பன். அவன் யாரைப்பற்றி குரங்கு என்று கூறுகிறான் என்பது, புதைபொருள் ஆராய்ச்சிக்குரியதல்லவே? அதிலும், ஆச்சாரியாரிடம் கண்டானாமே — அவரருகில் இருப்பவர்கள் யார்—அவரால் 'அனுமார்' என்று அழைக்கப்படுபவர்கள் யார்—நன்றாகத் தெரியுமே எல்லோருக்கும். என்ன இருந்தாலும், அவர்கள், நம்மவர்களல்லவா? இரத்த பாசமாச்சே! ஆகவே, வீரனை, அதட்டினேன். அவனோ, விலா நோகச் சிரித்தான்.

''ஏடா, மூடா! ஏன் சிரிக்கிறாய்?''

''நீ நினைக்கிற ஆட்களையல்லப்பா நான் சொன்னது!''

''பின், யாரை?''

"ஆச்சாரியாருக்குள்ளேயே உட்கார்ந்திருக்கிறது, ஒரு குரங்கு!"

"ஆச்சரியமாயிருக்கே!"

"ஆமாம்! ஆச்சாரியுமே அதனால் தான், உருவாகிறது"

"என்ன சொல்லுகிறாய். ஆச்சரியம் அதனால்தான் உருவாகிறதா?"

"ஆச்சரியமல்லப்பா — ஆச்சாரியர்!"

'என்ன அர்த்தம், இதற்கு?'

"அவரை ஆட்டிப் படைத்து, பல திருவிளையாடல்களைச் சிருஷ்டிப்பது, இந்தக் குரங்குதானும்" நீ, பார்க்கவில்லையா?"

"மனக்குரங்காம், அது! அவரே சொன்னார், முத்தியாலுபேட்டைக் கூட்டத்தில். அதை எப்படி நான் பார்க்கமுடியும்?"

"இதைத்தானு, அனுமார் பாணியில், 'கண்டேன் குரங்கை' என்று கத்திக்கொண்டு ஓடிவந்தாய்!"

"ஏன் தோழா, அவசரம் சென்றேன்; கண்டேன் குரங்கை: கொண்டுவந்தேன், இச்சுருளை" என்று, காகிதச் சுருள் ஒன்றைத் தந்தான். அது, அங்கே, ஆச்சாரியார் பேசிய பேச்சின் குறிப்பு. படித்தேன்; வேடிக்கையாயிருந்தது. உங்கள்முன் வைக்கச் சொல்லிவிட்டான் வீரன், கோபம் கொள்ளான். இந்தாருங்கள்.

* * *

"கூட்டம் கலைந்து வீட்டுக்குப் போனால், கவலை ஏற்படுகிறது. அந்தக் கூட்டம் எப்போது என்று ஆவலோடு எதிர்பார்த்து இருக்கவேண்டி இருக்கிறது அடுத்தக் கூட்டம் எப்படியோ! யார் நடத்துகிறதோ?"

வீரன் குறிப்பு:- ஐயோ, பாபம்!

*

"மகான்கள் எல்லாம் சேர்ந்து எனக்குக் கொடுத்துள்ள பதவியில் எனக்குச் சந்தோஷம், புகழ் கிடையாது. வலையில் சிக்கிக்கொண்டு தவிக்கிறேன்"

வீ. கு:- ஐயோ, பாபம்!

குறிப்பு:- 'மகான்கள்' என்று அவர் சொன்னபோது கேலித்வனி கேட்டது.

*

"நமக்குத் தைரியமிருக்கிறது என்ற மோகத்தில், சுதந்திரம் அடைந்தோம். ஆனால், நிலைமை என்ன? ஒரு இடத்தில் ஓட்டையை மூடினால் இன்னொரு இடத்தில் ஏற்படுகிறது. ஒரு ராஜ்யத்தில் ஓட்டையை மூடினால், இன்னொரு ராஜ்யத்தில் உண்டாகிறது"

வீ. கு:- ஓட்டைவிழுந்த வேட்டியைத் தைத்துக் கட்டிக்கொண்டால் மீண்டும் பொத்தல் ஏற்படும் எனவே, இரண்டாகக் கிழித்துத் தைத்துக்கொள்வது நல்லது என்று முன்பு, பாகிஸ்தானைப்பற்றி ஆச்சாரியார் பேசியது எனக்கு ஞாபகம் வருகிறது.

குறிப்பு:- இரண்டாகக் கிழிப்பது —நாட்டைப் பிரிப்பது.

*

"வேறு கட்சி ஆட்சியில் அராஜகம்தான் ஏற்படும். அராஜகம் என்றால், நாட்டில் அமைதி இருக்காது. வெளியே போனால் யார் அடிப்பார்களோ என்ற பயம்; சொத்து இருந்தால் யார் பறித்துக்கொள்வார்களோ என்ற பயம்"

வீ. கு:- இப்போது மட்டும் என்ன வாழ்கிறதாம்!!

*

"நம் நாடு, பெரிய நாடு. சிறிய இடமானால், ஒருமாதிரி சமாளிக்கலாம். ஒரு கப்பலில் பத்துபேர் இருந்து கப்பலுக்கு ஏதாவது ஏற்பட்டால், எங்காவது காட்டில் இறங்கி தப்பித்துக்கொள்ளலாம் ஆனால், நம் தேசம் பெரிது. ஜனக் கூட்டமும் பெரிது ஆகவே, அபாயமும் அதிகம்"

வீ. கு:- ஏனய்யா, இந்த வீண் அபாயம். இதனால்தான், திராவிட நாடு, கேட்கிறோம்!

*

"பழைய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் எல்லாம் காங்கிரஸ் ஆட்சிக்கு ஆதரவளித்து வருவதை நீங்கள் பார்க்கலாம். சர். ஏ. ராமஸ்வாமி முதலியார் இந்த ஆட்சிக்கு ஆதரவளிப்பதில் முதலாவதாக இருக்கிறார். அவருடைய சகோதரர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியாரும் பூரண ஆதரவு காட்டி வருகிறார். ஜஸ்டிஸ் கட்சியின் ஒரே பிரதிநிதியாக அசெம்பிளியில் அங்கம் வகிக்கும் சர். பி. டி. ராஜன் எனக்கு ஆதரவளித்து வருகிறார். இதற்கு என்ன பொருள்?"

வீ. கு:- காங்கிரஸ் அழிகிறதென்று பொருள்!!

*

"ராஜாஜி ஆட்சி வேண்டுமென்று நீங்கள் நினைத்தால், நான் உள்ளமட்டும், உயிர்நாடி தளர்ந்துபோகாதிருக்குமளவும் நான் இருக்கத் தயார்"

வீ. கு:-நாடு தாங்காது. ஐயனே! நாடு தாங்காது! அதனால்தான் மக்கள் தங்கள் ஆசையை 'விருத்தாசலம்' 'காங்கேயம்' தேர்தல்மூலம் உரத்துத் தெரிவித்துள்ளார்கள்!

*

"நான் போவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஒரு கஷ்டமுமில்லாமல், இந்த ஆட்சியை வேறு யாராவது நடத்துவதாயிருந்தால், போவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை"

வீ. கு:- ஆச்சாரியார் என்ன: பண்டாரசன்னதியா! அவர் ஆளும் நாடு என்ன, தருமபுரம் திருவாவடுதுறை ஆதீனமா, வாரிசு தேடி வைத்துவிட்டுப் போக!!

*

"என்னிடம் தினம் காலைமுதல் சாயந்திரம் வரை வருகிறவர்கள் எல்லாரும் 'நீ போகக்கூடாது! நீ போகக்கூடாது' என்று சொல்லுகிறார்கள். இவர்கள் இப்படி உபத்திரவம் செய்வதற்காகவே ஒரு சமயம் போய்விடலாம் என்று கூடத்தோன்றுகிறது. இவர்கள் மதில்மேல் பூனைமாதிரி. என்னைப் பார்த்தால் மட்டும் போகக்கூடாது போகக்கூடாது என்று சொல்லுகிறார்கள்."

வீ. கு:- தொண்டரடிப்பொடியாழ்வார்களே! உங்களுக்கு சமர்ப்பணம்!!

*

"நீ முன்னேபோய்விடு. அப்புறம் சாக்கடையைக் கழுவலாம் என்கிறார்கள். அது முடியாத காரியம்."

வீ. கு:- காங்கிரஸ் மந்திரிசபை, சாக்கடையென்றால் மந்திரிகள் எல்லாம் யார்?

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கமுடியாது. அவனை விரட்ட, வெடிகுண்டு எறிந்தோர் உண்டு — துப்பாக்கியால் சுட்டோர் உண்டு—ரயிலைக் கவிழ்த்தோர் உண்டு. ஆனால் அன்புமார்க்கத்தையே வழிகாட்டியாகக்கொண்டு, கண்ணியத்தையே கை விளக்காக ஏந்திச்செல்லும் நமது தலைவர்களுக்கு, அளிக்கப்பட்ட தண்டனை போதாதாம்! சர்க்கார் அப்பீல் செய்கிறது!! மாகாண மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பினை, ஏற்றுக்கொள்ள மறுத்து உயர்நீதி மன்றத்து படிக்கட்டேறுகிறது!!

குற்றத்துக்குத் தக்க தண்டனையை, மாகாண மாஜிஸ்திரேட், தரவில்லையாம்.

அவர்கள் அப்படி என்ன குற்றம் செய்தார்கள்? — நாட்டோரே நீங்கள் அறிவீர்கள்!

“என் தாயகம் வாழவேண்டும்!” இப்படிக் கூறுவதா குற்றம்.

“என் தாயகத்தை தறுக்குமிகக்கொண்டோன், இழிசொல் வீசி எளனப்படுத்தினால் கண்டிப்போம்!!” — இவ்விதம் சொல்வதா, மாபெருங் குற்றம்.

வாழவேண்டிய மக்களை, வறுமைப் படுகுழியில் ஆழ்த்தி அட்டகாசம் செய்யும் ஆச்சாரியார் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படவேண்டும். அவர், கூண்டுக்கு வெளியே நிற்குமாறு இதுநாள் வரை தாயகம் அனுமதித்தது எந்தைத் தவறென மெய்ப்பிக்கிறது!

கொடுமைக்காரர்வெளியே! குழந்தையுள்ளமும் மாசற்றமனப் பாங்கும் படைத்த தலைவர்கள் உள்ளே!

மக்களின் வரிப்பணத்தால் உயிர் வாழும் ஒரு செந்தேள், வெளியே!

மக்களுக்காக வாழ்வைத் தத்தம் செய்து, செந்தேள் கொட்டினாலும் தீக்குண்டத்தில் தள்ளப்பட்டாலும் பொறுமையுடன், அவைகளைத் தாங்கிக்கொள்ளும் பொதுநலத் தொண்டர்கள், கூண்டுக்குள்ளே!

அவர்கள் அனுபவிக்கும் தண்டனை போதாதாம்—‘அப்பீலாம்.’

ஆச்சாரியார் அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பதால், இதனை, வெகு எளிதில் செய்ய முடிகிறது. கைப்பணமெதுவும், நஷ்டமாகப் போவதில்லையல்லவா?

இது போல ஊரார் வரிப்பணத்தில், தன்னுடைய ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள, முற்படும் இந்த அதியற்புத விசித்திரத்தை, எவ்வண்ணம் விவரிப்பது! தேள்கொட்டும்—பிறகு போய்விடும். இந்தத் ‘தேள்’ கொட்டிக் கொண்டேயிருக்கிறது. குளிர் நிலவு போன்ற உள்ளமும், புதுமலர்ச்சி பூங்காவெனக் கருதப்படும் சிந்தையும், கொண்டோரை தமிழகத்தின் இல்லந்தோறும் செல்வமாக அழைக்கப்படும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களை சிறைக்குள் பூட்டி சித்ரவதை அனுபவிக்கச் செய்வதில் ஆனந்தம் காண முயல்கிறார்.

அதற்காக ஐகோர்ட்டுக்குப் போகிறார்.

அவசியமென்ன, ஏற்பட்டது, அப்பீலுக்கு?—கூறமுடியாது, எவராலும்.

என்னென்ன அட்டகாசங்களைச் செய்தார்கள்? — சிறு நிகழ்ச்சியினைக் கூடக் காட்ட முடியாது.

எனினும் ஆச்சாரியார், எப்படியாவது இவர்களை சிறைக்குள்ளே மடக்கிவிட வேண்டும் என்று திட்டங்கள் தீட்டுகிறார்.

இத்திட்டத்தின் ஒரு கட்டமே இந்த ‘அப்பீல்’ நிகழ்ச்சியாகும்.

ஆச்சாரியார் இந்த ‘அப்பீலு’க்கு உடன் பட்டதையும், அதில் குறிப்பிட்டுள்ள வாசகங்களையும் காணும் போது, அவருடைய கோர உள்ளம் தென்படும்.

எரிமலைகள் வாய் பிளந்தால், ஆயிரக் கணக்கில் மடிவராம் — இவர், எரிமலையில்லை. விஷ்ணுவின் சக்கராயுதம் நிமிஷநேரத்தில் விரோதிகளின் சிரங்களைக் கொய்யுமாம்—நல்லவேளையாக, அந்த ஆயுதம் புராணப் பெருமையோடு நின்று போய் விட்டது. அசுரர்கள், விசித்திர உருவங்கள் எடுத்து, விரோதிகளை விழுங்குவராம்—நல்லவேளையாக அந்த விசுவரூபத்தை நமது ‘வேதாந்த சிரோன்மணி’யால், எடுக்க இயலாது. எனவே, நாம் எல்லாம், இன்னும் நடமாடுகிறோம்! இவை யாவும் உண்மையாயிருந்தால், ஆச்சாரியார் அத்தனை முறைகளையும் கையாளத் தவறார் என்பதை, நாம் உறுதியாக நம்பலாம்.

இது, இருபதாம் நூற்றாண்டு. சட்டம், நீதிமன்றம் எல்லாம் இருக்கிறது.

ஆபிரிகாவிலிருக்கும் மலான், நீதி மன்றங்களைக்கூட மதிப்பதில்லையாம். நம்முடைய ‘மலானுக்கும்’ அந்தப் பாதைதான் பிடிக்கும். ஆனால், இங்குள்ள நிலை, அவரை அனுமதிக்கவில்லை.

அதனாலேயே, எந்தெந்த குறுக்குவழிகள்மூலம், நம்மைச் சித்ரவதை செய்யலாம் என்று ஆலோசிப்பதிலேயே காலத்தைக் கழிக்கிறார் — அதிலும், அவர் ஓர் வக்கீலல்லவா?—சட்டநூலின் மூலைமுடுக்குகளிலெல்லாம் நுழைந்து, ஏதாவது கிடைக்குமா என்று தேடுகிறார்—அலைகிறார்.

நம்முடைய தலைவர்களுக்கு தண்டனை அளித்த கீழ்கோர்ட், சரிவர நடக்கவில்லை, என்பதே இந்த அப்பீலின் சாராம்சமாகும்.

இதன் விளைவு என்னவாகும்?—தூத்துக்குடியிலும், திருச்சியிலும், நமது தோழர்கள்மீது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆச்சாரியாரின் ஆசை, அந்த வழக்குகளைப் பாதிக்குமா—பாதிக்காதா என்பதை நல்லோர் சிந்திக்க வேண்டுகிறோம்.

இந்தளவுக்குப் பிறரைத் தூண்டும்படியான முறையிலும், தண்டனை வாங்கித் தரும்படியான வகையிலும், இவருக்கு, நம்மீது ஆத்திரம் ஏற்படக் காரணமென்ன? நாம் என்ன, நாட்டைக் குட்டிச்சுவராக்கினோமா—இவர்களைப்போல. நஞ்செய் புஞ்செய் நிலங்களையெல்லாம் பாழாக்கினோமா? நடுப் பகலில் வீடு புகுந்து கொள்ளையடித்தோமா? ஆச்சாரியார் ‘குழாத்தின்’ இல்லங்

காஞ்சியில்

அறிவு வளர்ச்சிக் கழக இரண்டாம் ஆண்டு விழா

15—11—53 ஞாயிறு மாலை 6-மணிக்கு சின்ன காஞ்சிபுரம் போலீஸ் ஸ்டேஷன் அருகில் தோழர் பி. கச்சபாலையம் தலைமையில் நடைபெறும் தோழர்கள், என். எஸ். இளங்கோ, காஞ்சி—கல்யாணசுந்தரம், வே. சம்மந்தன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

களில் புகுந்து அட்டகாசங்கள் செய்தோமா?

எதுவும், செய்யவில்லை. வேறு நாடுகள் அல்லது வேறு கட்சிகளென்றால், இத்தகைய கொடுங்கோலருக்குப் பதிலுக்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கும். அதிலும் சிறு பொறி போதும் — நாடு முழுமையும் எரியும் காட்சியைக் காட்டிட முடியும். ஆனால், எரிந்து கொண்டிருக்கும் நாட்டை, அமைதிப்படுத்தியவண்ணமே, நாம் பணிபுரிந்துகொண்டிருக்கிறோம். இந்த நற்பண்பினை அறியும், நிலையிலில்லை, ஆச்சாரியார். காரணம், அவர், ஆத்திரக்காரராகிவிட்டார் — பழிவாங்க நினைக்கிறார்.

பழிவாங்குதல் என்றால், முன்னர் நாம் ஏதாவது அவருக்குத் தீங்கிழைத்திருக்கிறோமா? — இல்லை! இல்லை!! தனிப்பட்ட முறையில், அவரைப்பற்றி, நாம் என்றுமே கவலைப்பட்டதில்லை.

எனினும், நம் மீது பழிவாங்க எத்தனிக்கிறார்.

ஏன்?

நாம், அவர் கட்டிக்காக்க விரும்பும், உடைந்துபோன சமுதாயத்தைப் புதுப்பிக்க விரும்புவதால்.

இதனாலேயே இத்தனை அட்டகாசங்களையும், நம்மீது ஏவி, விடுகிறார்: நினைத்த உடன் அழிக்கும் சர்வாதிகாரம், தன்னிடம் இல்லாத காரணத்தால், சட்டத்தின்மூலம் பழிவாங்க முயல்கிறார்.

சட்டத்தின் நாக்குகள் எத்தகையவை என்பதை நாம், அறிவோம். இவ்வண்ணம், அரசியல் எதிரிகளை 'சட்டச் சந்துகளால்' சாய்த்திட முயன்றவர்களின் சரிதங்களையும் அறிவோம்.

மாவீரரெனப் போற்றப்பட்டார், பாரசீகச்சீயம் — முஸாதீக் இன்று அவரை, பாரசீக மன்னன், சபை நடுவே நிறுத்தி, போலீசார் புடைசூழ சட்டத்தால் கொட்டுகிறான். 'சிங்கம், தங்கம்' என்றெல்லாம் புகழ்ப்பட்ட ஷேக் அப்துல்லா, சிறையில், சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

சட்டம், நல்லோரை நம்பி, செய்யப்பட்டது.

நன்மைகள் உருவாவதற்காகச் செய்யப்பட்டது.

ஆனால், இது, சில சமயங்களில், நாசகாரர்கள் கையில், அகப்பட்டு விழிப்பதும் உண்டு. அந்தக் கட்டம்தான், இன்று திராவிடத்தில், நாம் காண்பது. இதுபோன்ற கட்டங்களை, சரிதம், மிகமிக அதிகமாகச் சந்தித்திருக்கிறது. சட்டம் —வாயுள்ள ஜீவனல்ல! ஆனால் செத்துப்போன ஜந்துமல்ல!! அக்கிரமக்காரர்கள், அதன் சந்துகளில் புகுந்து, தப்ப முயலலாம். ஆனால், மக்கள் நீதியின் முன்னால், 'அந்த, பூச்சிகள்' அழியத்தான் நேரும். அதனை அறியாமல், சட்டம் கைக்கு வந்துவிட்டது எனும் துணிவில், சண்டமாருதமெனக் கிளம்பும், சர்வாதிகாரப் பொம்மைகள், காலச் சூறுவளியால், பீடத்திலிருந்து உருட்டப்படுவர். பின், அவர்களையே கூட, சட்டம், சாய்க்கலாம்.

இதனை மறந்து, எழிலெண்ணமும் நாகரீக உள்ளமும், நல்வாழ்வும் நஞ்சொழிக்கும் கொள்கையும் கொண்ட நம்மை அழிக்க முயல்கிறார், இந்த ஆத்திரக்காரர்.

அவர் முயற்சியின் முடிவை, நீதியின் தீர்ப்புக்கு விட்டு விடுகிறோம்.

நமது தலைவர்களுக்கு அதிகத் தண்டனை வாங்கித் தருவதற்காக, சட்டநாதர்களின் துணைதேடுகிறார்.

ஆனால் அவரது கண்பரும் காங்கிரஸ் வாதியுமான டாக்டர் வரதராஜுலு அவர்களையும் 'பழிவாங்க' அவரது அரசாங்கம், வழக்குத் தொடுத்திருக்கிறதாம்.

டாக்டர் — இப்போது ஆச்சாரியாரை எதிர்க்கிறாரல்லவா? அதனால் டாக்டர் சம்பந்தப்பட்டிருந்த கண்காட்சி சம்பந்தமாக 'நம்பிக்கைத் துரோகக் குற்றம்' சாட்டி கோர்ட்டில் வழக்காட உத்திரவிடப்பட்டுள்ளதாம்.

எனவே, ஆச்சாரியாரின் அந்தரங்க நோக்கத்தைக் குறித்து அதிகம் விவரிக்கத் தேவையில்லை.

ஆனால், ஒன்றுமட்டும் நன்றாக மனதில் பதியவைத்துக்கொள்ள வேண்டும். 'ஆண்டவன் செயல் ஆண்டவன் செயல்!!' என்று பேசும் ஆச்சாரியார், அந்த ஆண்டவனின் பெயரை தன்னுடைய பித்தலாட்டப் போர்வையாகப் பிரயோஜனப்படுத்துகிறார். ஆனால், தன் வர்ணாசிரமத்தையும். குலதர்மத்தையும் நிலைநாட்டப் பெரிதும் நம்பியிருப்பது ஆட்சி அதிகாரத்தைத்தான். அதனாலேயே அதனை விடாப்பிடியாக வைத்துக் கொள்ள, எது வேண்டுமானாலும் செய்யத் தயாரென்கிறார்.

இதனையே அவர் வயோதிகப் பிடிவாதம் என்கிறார்.

அவர் கூறுவதுபோல, இந்தப் பிடிவாதம் அப்படியே இருக்கலாம். ஆனால் பாபம்! வயோதிகம்—சாவின் கடைசிப்படி என்பதையும் அவர் தெரிந்துகொள்ளவேண்டும்!!

ஆனால் ஆசை வெட்கம் அறியாததாலும், ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதாலும், இன்று, தான் மூட்டும் தீ, எங்கு கொண்டுபோய் விடும் என்பதை எண்ணிப் பார்க்கவில்லை.

இது, அவரை நம்பி வாழும் குழாத்தின் எதிர்காலத்துக்கு, நிச்சயம் நல்லதாக இருக்கமுடியாது.

பிரெஞ்சுப் புரட்சி முடிவுற்றதும், லூயிக்கு நேர்ந்த கதியையும், இங்கிலாந்தில் சார்லசுக்கு ஏற்பட்ட முடிவையும், ரஷ்ய சக்கரவர்த்தி ஜாருக்கேற்பட்ட கதியையும், தான் தோன்றித்தனத்தில் ஈடுபடுவோர் நிச்சயம், இன்றே, நெஞ்சில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

'அவ்வளவு நாட்களுக்கா, நாம் இருக்கப்போகிறோம்?' — என்ற எண்ணம்போலும், ஆச்சாரியாருக்கு.

ஆதலால்தான், இவ்வண்ணம், ஆத்திரத்தைக் கிளறும் அடாபிடிகளில், ஈடுபடுகிறார்.

என்றும், நீதி வெல்லும்! நேர்மை வெற்றியளிக்கும்!!

எனவே, இந்த 'நெஞ்சழுத்தக்காரர்களின்' போக்கு குறித்து கவலைப்பட வேண்டியதில்லை.

சிறைக்குள் கிடக்கும் நமதரும் தியாகச் சிகரங்களை, ஒருமுறை எண்ணிக் கொள்வோம். அவர்கள், அங்கே, எப்படியிருக்கிறார்களோ— எவ்வண்ணம் கிடக்கிறார்களோ, தெரியவில்லை, நமக்கு. நமதரும் பொதுச் செயலாளரோ, இருதய நோயல் பீடிக்கப்பட்டிருந்தவர். அவர், என்ன நிலையிலிருக்கிறாரோ, அறியோம்—நாம். ஆத்திரக்காரரின்

பிடியில் சிக்கி நாடு அடையும் வேதனை, அவரது இருதய வலியைப் பன்மடங்காக்கவே செய்யும். அந்த வலியையெல்லாம் தாங்கிக்கொண்டு, அவரும், ஏனைய தோழர்களும், எந்த இலட்சியத்துக்காக சிறைக்குள் கிடக்கிறார்களோ, அந்த இலட்சிய விளக்கை எரியச் செய்து, நம்மாலியன்றதையெல்லாம், செய்வோம்.

ஆத்திரக்கார ஆச்சாரியாரின் எண்ணத்தில் மண்விழச் செய்ய வேண்டும் அவர், நமது வளர்ச்சியைக் கண்டு, அணு அணுவாகத் துடிக்க வேண்டும்—அதை, நாம் பார்க்க வேண்டும்.

அத்தகைய வளர்ச்சியைப் பெற, கழகத் தோழர்காள்! காரியமாற்றுங்கள்!!

கழகம் — தன் புதல்வர்களை, ஆத்திரக்காரரிடமிருந்துகாப்பாற்ற, நீதியின் படிக்கட்டுகளில் நிற்கிறது.

அந்த நீதி பெற — உங்கள் ஆர்வமே, தேவை. அதனை, ரூபாயாக— அணாக்களாக — காலணாக்களாக— அனுப்புங்கள் — தலைமை நிலையத்துக்கு.

அட்டூழியத்தைச் சாய்ப்போம்! ஆத்திரக்காரர்களின் போக்கை ஒழிப்போம்!!

❀

மக்கள் தீர்ப்பு!

"மக்கள் என்னை நம்புகிறார்கள்"

"மக்களுக்காகத்தான், இந்தத் தள்ளாத வயதிலும் ராஜ்ய பாரத்தைச் சுமந்திருக்கிறேன்"

"என்னுடைய ஆட்சியில் நல்லது ஏற்படும் என மக்கள் எதிர்பார்த்துக்கிடக்கிறார்கள்"

"அந்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகத்தான், பதவியிலிருக்கிறேன்."

*

ஆச்சாரியார் அனுதினமும், இவ்வாறு பேசி வருவதை, நாடு அறியும்.

மக்கள் சக்தி — தன்னை விரும்புவதாகச் செல்லுமிடந்தோறும், பறை சாற்றி வருகிறார்.

சென்னை மாநிலத்து மக்கள் யாவரும் தியாகராயர் நகரிலுள்ள இவரது மாளிகைக்குமுன் சென்று, 'அனாதரட்சகா! ஆதரிப்பீர்!!' என்று மகஜர் நீட்டி; மண்டியிட்டதாக, சிறு செய்தியைக்கூட காணவில்லை, நாம். எனினும் அவ்வண்ணமே, செப்பி வருகிறார்! அதிலும் கடந்த 'ஜூலை 14'க்குப்பின் அடிக்கடி இவ்வண்ணமே கூறிவருகிறார்!!

திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது. துப்பாக்கியால் சுட்டும்—தலைவர்களைச் சிறையில் தள்ளியும், அறுவர் உயிர்களைப் போக்கியும் — நூற்றுக்கணக்கானோரின் கைகால்களை ஒடித்தும், எதேச்சாதிகாரத் தர்பார் நடத்திய பிறகு, சென்னை மாநிலத்தில் இரண்டு முறை 'மக்களின் தீர்ப்பு' கிடைத்திருக்கிறது. எந்த மக்கள் தன்னைப் பதவியிலிருக்க வேண்டுமென்பதாக வலியுறுத்துவதாக ஆச்சாரியார் பேசித் திரிகிறாரோ, அதே மக்கள், தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். ஒன்று விருத்தாசலம்; இன்னொன்று காங்கேயம். விருத்தாசலம் உபதேர்தலில், காங்கிரஸ் முறியடிக்கப்பட்டது! இப்போது காங்கேயம் உபதேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் தோழர் சுப்பராயன் அவர்களை எதிர்த்து தோழர் பழனிச்சாமி அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார். இந்த இரண்டு இடங்களிலும், ஆச்சாரியாரின் ஆட்சிபற்றிய மக்கள் தீர்ப்பு கிடைத்துவிட்டது.

இந்த இரண்டு தேர்தல்களும், 'ஜூலை 14'க்குப் பின்னர் நடந்தவைதான்.

ஆச்சாரியாரின் புதிய கல்வித்திட்டம் — அவரது அடக்கு முறைத் தாண்டவம் — ஆகியவைகள்பற்றி மக்கள் வழங்கிய தீர்ப்புதான், காங்கேயம் முடிவு.

தமக்கேற்பட்ட தோல்வியைக் கண்டதும் கோவை நண்பர்—நிதி மந்திரி — சி. சுப்ரமணியம் கூறினாராம், 'தகுந்த ஆளை காங்கிரஸ் சார்பில் நிறுத்தி வைக்கவில்லை', என்று. முன்பெல்லாம் 'கழுதையைநிறுத்தி வைத்தாலும் காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள்', என்பார்கள். அந்தக் காலம் ஓடிப்போய் விட்டது—காங்கிரசின் பெயரைச் சொன்னாலே, மக்கள் ஓட்டுப் போட்ட காலம் போய் விட்டது—என்பதை, சொல்லாமல் சொல்லுகிறார், சுப்ரமணியம். அவரது கூற்று, காங்கிரசின் அபல நிலையை மட்டுமின்றி, அதை நடத்திச் செல்வோரின் யோக்யதையையும் வெளிப்படுத்துகிறது.

*

மக்கள் என்பக்கம் இருக்கிறார்கள்!—என்று சொல்லிவந்தார், ஆச்சாரியார்.

மக்கள் எந்தப் பக்கம் இருக்கிறார்கள் என்பதை இந்தப் பொதுத் தேர்தல் நிரூபித்து விட்டது.

என்ன பதில், தருகிறார், ஆச்சாரியார்?

அவரது புதிய கல்வித் திட்டத்தை — 'வேண்டாம்' என்று கூறுகிறார்கள், காங்கேயம் தொகுதி மக்கள். அவரது அடக்கு முறை ஆட்சி நீடிக்க விடோம்! — என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள், காங்கேயம் மக்கள்.

தன்பக்கம் மக்கள் ஆசைகளைக் குவித்துக் கொண்டிருப்பதாக வெளியிட்டாரே ஆச்சாரியார், இப்போது என்ன செய்யப் போகிறார்?

மக்கள் தீர்ப்பு அளித்துவிட்டார்கள்!—இரண்டாவது, முறையாக. இந்தத் தீர்ப்பு, சாதாரணமானதல்ல—ஒரு பெரிய அரசியல் நெருக்கடியில் அகப்பட்டு, தாயகம் திண்டாடும் போது, கிடைத்த தீர்ப்பாகும். இதற்கு, ஆச்சாரியாரும் அவர் தம் சகாக்களும் கூறும், பதில் என்ன!

காங்கேயம் தொகுதியில் வெற்றி பெற்ற தோழர் பழனிச்சாமி அவர்களையும் அவரை வெற்றிபெறச் செய்த கழகத் தோழர்கள், முற்போக்கு வாதிகள் எல்லோரையும் வாழ்த்தும் இந்தச் சந்தர்ப்பத்தில், கேட்கிறோம்—"ஆச்சாரியார், அவர்களே! என்ன உமது பதில்?"

மக்களை இழுத்துப் பேசினீர்!—இதோ, மக்கள் தீர்ப்பு கிடைத்து விட்டது.

மக்கள், உமது பக்கம், இல்லை. தியாகத்தால் தாயகத்தைக் குளிப்பாட்டும், எமது பக்கம் இருக்கிறார்கள். என்ன சொல்லப் போகிறீர்?

★

'ஜே' நின்றது!—சினம் பிறந்தது!!

வகுப்புத்துவேஷிகள்

பதவிவேட்டைக்காரர்கள்

சுயநலக்காரர்கள்

குறுகியபுத்திகொண்டோர்

*

அன்பர் ஆச்சாரியார், இந்த வார்த்தைகளால், அர்ச்சிக்கிறார்!

"இதிலென்ன புதுமை? இவ்வண்ணம்; அன்று முதல் ஏசி வருகின்றனரே, நம்மை" என்று கேட்கலாம், தோழர்கள்.

உண்மை. சில தினங்களுக்கு முன்பு, சேலமாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தபோதுகூட, ஆச்சாரியார், மறந்திடவில்லை, இந்தப் 'பழி'களை, நம்மீது சுமத்த.

ஆனால், கடந்தவாரம், அவர்செய்திருக்கும் அர்ச்சனைகள், நமக்கல்ல; காங்கிரஸ்காரர்களுக்கு.

நம்மீது வீசும் 'ஏசல்களை' விடக் கடுமையான மொழியில், தேசியத் தோழர்களை, அர்ச்சித்துள்ளார், அவர்.

நம்மீது மேற்கண்ட குற்றச் சாட்டுகளை, ஆச்சாரியார் மட்டுமல்ல; காங்கிரஸ்காரர்களும் மிகுந்த ஆனந்தத்தோடு, வீசுவதுண்டு—மேடைகளில்.

இன்று, அவர்கள்மீது, வீசுகிறார்—ஆச்சாரியார்.

கடந்த வாரம் — காங்கிரஸ்காரர்களின் கண்களுக்கு நாம், வகுப்புவாதிகளாகத் தென்பட்டோம்! பிற்போக்காளர்களாகக் காட்சி அளித்தோம்! சுயநலக்காரர்கள் என்று தூற்றினர்! குறுகிய புத்தி கொண்டோர், என்று ஏசினர்! — இந்த மொழிகளை, அவர்கள், வீசியதற்குக் காரணம், நாம் எதிர்க்கட்சிக்காரர்களென்பதால்—நம்முடைய உரிமைகளை நாம் பெறத்துடிக்கிறோம் என்பதால்—இந்த ஆட்சியின் அக்கிரமத்தைக் கண்டிக்கிறோமென்பதால்.

ஆனால், இன்று, அதே காங்கிரஸ் தோழர்களைப் பார்த்து, இந்தவாரம் ஆச்சாரியார் அர்ச்சிக்கிறார்.

அவர்கள் வகுப்புத்துவேஷிகளாம்! பதவிவேட்டைக்காரர்களாம்! சுயநலக்காரர்களாம்! குறுகிய திருஷ்டிகொண்டோராம்!

ஏன், இந்தக் குற்றச்சாட்டுகளை, அவர்கள்மீது வீசியுள்ளார்?

"ஆச்சாரியார் ஆட்சி அதிருப்தி மிக்கதாக இருக்கிறது"

"அவரது ஆட்சியில் 'ஒரு சாராரே, பலன் பெறுகின்றனர்"

"இஷ்டம்போல், அவர், ஆட்சி புரிகிறார்"

என்ற எண்ணங்களை எடுத்துரைக்கத் துவங்கியிருக்கின்றனர்—தேசியத் தோழர்கள். உடனே, அவர்கள்மீது மேற்கண்ட அர்ச்சனைகளை, உதிர்த்துள்ளார், ஆச்சாரியார்!

காங்கிரஸ்காரர்களுக்கு இன்று பதவிவேட்டையாடுவதே, வேலையாகப் போய்விட்டதாம்.

அதிகார ஆசை கொண்டு திரிகிறார்களாம்.

அதனால் அசட்டுத்தனமான முயற்சிகளில் ஈடுபடுகிறார்களாம்.

வகுப்புவாதங்களைக் கிளப்புகிறார்களாம்.

தன்னுடைய ஆட்சியின்மீது தன் கட்சிக்காரர்களே, அதிருப்தி காண ஆரம்பித்ததும், அவர்களுக்கு இத்தகைய பட்டங்கள் சூட்டப்படுகின்றன, ஆச்சாரியாரால்.

இவைமட்டுமா?—இன்னும் சூட்டுகிறார், கேளுங்கள்.

'கொள்ளையடித்ததில் பங்குபோடுகிற கூட்டம்'

'லாபத்தில் பங்குகேட்கிறார்கள்'

காங்கிரஸ்காரர்கள், பங்கு கேட்கிறார்களாம். எதில்? கொள்ளையடித்ததில்! கூறுகிறார், ஆச்சாரியார்.

கொள்ளையடித்தது என்று குறிப்பிடுவது, எதனை? சுதந்திரத்தை!

கள்ளர்கள் என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறார், அவர்—அந்தக் கள்ளத் தொழிலில் கிடைத்த அதிகாரத்தைப் பங்குபோட வேண்டுமென, அவர்கள் கேட்கிறார்களாம்.

*

நாம், இந்தப் பாசீச வெறியரின் ஆட்சியைக் கண்டித்தோம் — கண்டிக்கப்பட்டோம்.

இன்று, தேசியத் தோழர்கள் இந்த ஆச்சாரியார்மீது அதிருப்தி, கொள்கிறார்கள். ஆகவே, கண்டிக்கப்படுகிறார்கள்.

அந்த அதிருப்தியை அவர்கள் வெளியிட்டதால், கிடைக்கும் பட்டங்கள்—வகுப்புவாதிகள்! சுயநலக்காரர்கள்! குறுகிய திருஷ்டி கொண்டோர்!

இந்தக்குற்றச்சாட்டுகளை, இன்று மட்டும், வீசுவதேன் ஆச்சாரியார்? காங்கிரஸ்காரர்களிடம் தாண்டவமாடும் இந்தக் குணாதிசயங்களை, இன்று மட்டும், எப்படிக் கண்டுபிடித்தார்.

காங்கிரசாரிடம், 'கொள்ளையடித்ததில் பங்குபோடும் குணம்' இருக்கிறதென்பதை, இன்று எப்படிக் கண்டுபிடித்தார், ஆச்சாரியார்?

ஆண்டாண்டுகாலமாக அவர்களுடன் ஒட்டியுறவாடும் ஆச்சாரியாருக்கு, இத்தனை, நாட்களும் இந்தக் குணாதிசயங்கள் தென்படாமல், இன்று மட்டும் காட்சியளிப்பதேன்?

காங்கிரஸ்காரர்களிடமிருக்கும், சுயநலமும், குறுகிய புத்தியும், குதர்க்கமனப்பான்மையும், அசட்டுத்தனமும், இன்றுமட்டும் எப்படித் தெரிந்தது, ஆச்சாரியாருக்கு.

கடந்த வாரம் — அவர்கள் யாவரும், 'ஜே! ஜே!' போட்டபோது—இந்தக் குற்றங்கள் தென்படவில்லை,

இந்த வாரம், — அவர்மீது அதிருப்தியைக் கண்டதும்—இந்தக்குற்றங்கள், தென்படுகின்றன.

"ஏ! வகுப்புத் துவேஷிகளே"—என்று நம்மைப் பார்த்து அவர்கள் ஏசியபோது, இனிமையாகத் தென்பட்டது, ஆச்சாரியாருக்கு.

இன்று, அவரைப் பார்த்து அவர்கள் கூறத்தொடங்கியதைக் கண்டதும், நம் வரிசையில் அவர்களையும் வைக்கிறார் — ஆத்திரத்தோடு ஏசுகிறார்.

*

ஆச்சாரியார் பொதுமேடைகளில் பேசும்போது, இவ்வண்ணம் நம்மீது குற்றச்சாட்டுகளைக் கொட்டுவதுமட்டுமல்ல, 'இந்த துவேஷபுத்திக்காரர்களின் துடுக்கை, அடக்காமல் போனேன்!'' என்று ஆர்ப்பரிக்கவும் தவறுவதில்லை.

அதேபோல, இன்று, காங்கிரஸ்காரர்களையும் பார்த்து, ஆர்ப்பரிக்கிறார்—என்னுடலில் கடைசிமூச்சு இருக்கும்வரை, இவர்களின் போக்கை எதிர்த்துப்போராடுவேன்'' என்பதாக

கடைசி உயிர்த் துடிப்பு இருக்கும்வரையில் இவர்களை எதிர்த்துப் போராடுவாராம், ஆச்சாரியார்! ஏனெனில், அவர்கள் வகுப்புவாதம் பேசுகிறார்களாம்! இந்த வகுப்புவாதம் — ஜனநாயகத்துக்கு ஆபத்தாம்!

"ஜனநாயகத்தைக் காப்பதற்காக இதனை எதிர்க்காமல் நானிரேன்'' என்றும் வெளியிட்டுள்ளார்.

இத்தனைக் கோபம்—இவ்வளவு வேகம் — காங்கிரஸ்காரர்கள்மீது, இந்த வாரம், ஏற்பட்டிருக்கிறது, அவருக்கு.

ஏனெனில், அவர்கள், ஆச்சாரியாரின் ஆட்சியில், அதிருப்திகண்டு பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

அவருடைய ஆட்சி ஒரு குலத்துக்கொரு நீதி வழங்குகிறது — சொல்கின்றனர், தேசியத் தோழர்கள்.

ஆச்சாரியார் கொண்டுவந்த ஆரம்பக்கல்வித் திட்டம் தீங்கு உண்டாக்கும்-தெரிவிக்கின்றனர், இவ்வாறு.

அவர், சர்வாதிகாரியாக நடக்கிறார்—சங்கடத்தோடு, வெளியிடுகிறார்கள்—இன்று.

தோழர்களே! உங்கள் பதில் என்ன?

★

தூத்துக்குடித் தோழர்கள்மீது
சாட்டியிருக்கும் குற்றப் பட்டியல்

96

சுமத்தப்பட்டிருக்கும் செக்ஷன்கள்

16

சதி வழக்கு சம்பந்தமாக
சர்க்கார் தரப்பு சாட்சியங்கள்

91

★

இதற்கு, உங்கள் பங்கு என்ன?

வழக்கு நிதிக்கு பணம் அனுப்பிவிட்டீர்களா?
இன்றே அனுப்புங்கள்!

முகவரி:
அ. பொன்னம்பலம்,
'அறிவகம்', சென்னை-13.

இதே, குற்றச்சாட்டுகளைத்தான், நாமும் கூறினோம்—பழிகளைப்பெற்றோம்.

இன்று காங்கிரஸ்காரர்கள் கூறத்தலைப்படுகிறார்கள் — பழி சூட்டப்படுகிறார்கள்.

*

இந்தப் பூமியில், நீதிக்கும் நேர்மைக்கும் போராட எந்தக் குரலை யெழுப்பினாலும், அன்று முதல் இன்றுவரை, இதே பழி சுமத்தப்பட்டு வருகிறது.

நேற்று, நம்மீது.

இன்று, காங்கிரஸ் திராவிடர்கள் மீது.

நேற்று, காங்கிரஸ் திராவிடர்களே, நம்மீது சுமத்தினர்.

இன்று, ஆச்சாரியார், அவர்கள் மீது சுமத்துகிறார்.

நேற்று, நாம்—ஆச்சாரியார் ஆட்சியைக் கண்டித்தோம். அதனால், தூற்றப்பட்டோம்.

இன்று, இவர்கள்—கண்டிக்கிறார்கள். அந்த அர்ச்சனைக்கு ஆளாகிறார்கள்.

"ஏ! வகுப்புவாதிகளே!!" என்று அழைக்கிறார் ஆச்சாரியார்.

''யாரய்யா? நீர்தான்! உமது குட்டை வெளிப்படுத்துகிறேன்''!- இவ்வண்ணம் எதிரொலிக்கிறார், டாக்டர் வரதராஜுலு.

இந்தக் காட்சியைக் காண்கிறோம், காங்கிரஸ் கூடாரத்தில்.

இன்றுதானா!—இல்லை, முன்பும் கண்டிருக்கிறோம். ஆனால் அப்போதெல்லாம் சூட்டப்படாத, அடைமொழிகளை இன்றைய தினம், காங்கிரஸ்காரர்கள் சூட்டிக்கொள்கிறார்கள்,

'கலவர வாலாக்கள்'—என்கிறது ஒரு தேசிய ஏடு.

'ஒரு சிலர் விஷமம்'—என்கிறது இன்னொரு ஏடு.

'பிசு பிசுத்தது' — என்கிறது, வேறோர் தேசிய ஏடு.

'தலையிலடித்தார்!' — என்று ஆர்ப்பரிக்கிறது மற்றொன்று.

ஆச்சாரியாரின் ஆட்சிப் பிடிக்கவில்லை! — என்று அவர்கள் கூற ஆரம்பித்ததும், இத்தனை 'மகுடங்கள்' சூட்டப்படுகின்றன.

இந்த ஏடுகள், காங்கிரஸ் கட்சிக்காகப் பாடுபடுபவை.

காங்கிரஸ்காரர்கள், ஆச்சாரியார் வேண்டாமென்கின்றனர்.

இவர்கள் வேண்டாம் என்பதிலும் 'இவர், இருப்பேன்' என்று பிடிவாதம் செய்வதிலும், முரண்பாடான கருத்துக்கள் இருக்கலாம்.

எனினும் ஏடுகளின் பொறுப்பென்ன! இருவரும் காங்கிரஸ்காரர்களென்பதால், கூடியவரை, இந்த வெட்கக்கேட்டை 'நாசூக்கான' மொழியில் மக்கள் முன் வைக்கவேண்டும்.

செய்தனவா, தேசிய ஏடுகள்? — ஆச்சாரியாரைக் காக்க சல்லடங் கட்டிக்கொண்டு புறப்படுவதுபோல், அவரை எதிர்ப்போரின்மீது ஆபாசமான பாணங்களையெல்லாம் அள்ளி வீசுகின்றன.

என்ன பொருள், இதற்கு?—ஒரே கட்சியிலிருப்போருக்கு வழங்கப்படும் மரியாதையா, இது! அன்பா, இது!!

ஏடுகள் யாவும், 'யாருடையது', என்பதை நாடு அறியும். அதனை, மெய்ப்பிக்கின்றன, இச்சமயம். ஆச்சாரியாருக்கு ஆபத்தென்றதும், அலறித்துடித்துக் கொண்டு, சங்கநாதம் செய்கின்றன, தேசிய ஏடுகள்.

ஏன், இது? இந்தப் பற்றுக்கு என்னவென்று பெயர் வைப்பது!

இதே, 'அன்பை', ஒரு ஜனயுகமும், பேரிகையும் காட்டினால், அது வகுப்புவாதம்! ஜனநாயகவிரோதம்!!

இதே பற்றை ஒரு 'நம் நாடு'ம் 'விடுதலை'யும் காட்டினால், அது வகுப்புத்துவேஷம்! ஜனநாயக விரோதம்!!

அங்கு, இந்த விஷயம்—தென்றலாகவும், இங்குமட்டும் தீயதெனவும்,கருதப்படுவதேன்? —சிந்திக்க வேண்டும், தேசியத் தோழர்கள்.

•

டாக்டர் வரதராஜலுவும், இன்ன பிறரும், திராவிடமுன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்களல்ல.

அவர்கள் திராவிடத் தனி நாடு கேட்பவர்களல்ல.

திராவிடத்தில் பொதுவுடைமை நாதம் எழும்புவதை, விரும்புவர்களல்ல.

அகில இந்தியக் காங்கிரஸ் என்ன கட்டளையிடுகிறதோ, அதன்படி, நடப்பவர்கள்.

டில்லி இட்டதை, தலைமேல் தாங்கி, பணிபுரியும் கூட்டத்தார், அவர்கள்.

அவர்கள், ஆச்சாரியாரின் அரசாட்சியில் குறை கண்டு பிடிக்கிறார்கள்.

அதற்குப் பெயர், வகுப்புவாதமாம்! கூறுகிறார், ஆச்சாரியார்!!

டாக்டர் வரதராசலுவும்,பிறரும், பதவியாசை காரணமாக, குற்றங் கண்டுபிடிக்கும்; 'அசட்டுத் தனத்தில்' ஈடுபட்டிருக்கிறார்களாம். இதுவும், அவர், கூறுவதே.

அவர்களிடம் பதவியாசை உண்டோ — இல்லையோ, நாடு அறியும்.

ஆனால், அங்ஙனம், அவர்கள் பதவியாசை கொண்டால்தான் தவறென்ன?

எங்கேயோ கிடந்தவர்—எப்படியோ வந்து — ராஜ்யபீடத்தில் ஆர்ப்பரிக்கும் போது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்,மக்கள் முன் சென்று வோட்டுக் கேட்டவர்கள், மக்களைச் சந்திப்பவர்கள், ராஜ்ய பாரத்தை நடத்த விரும்பினால், தவறு! அப்படி ஆசைப் படுவது, தகாதா!!

ஆச்சாரியார் ஆண்டால், "ஆகா! இவ்வளவு வயதிலும், ராஜ்ய பாரத்தை நிர்வகிக்கிறார். என்னே, மக்கள்பால் இவருக்குள்ள அன்பு!" என்பதும், ஏனையோர், ஆள வேண்டுமென நினைத்தால், "அதற்குப் பதவியாசை" எனப்பெயர் சூட்டுவதும், எதைக் காட்டுகிறது?

ஆச்சாரியார் மொழியிலேயே கூறவேண்டுமென்றால், "கொள்ளையடித்த சொத்துக்கு", இவர் மட்டும் தானா, அதிபதி? கொள்ளையடிப்பதில் கூட்டாக உழைத்தவர்கள், கிடைத்த சொத்தில், பாக்யத்தை கொண்டாடுவது, தவறு! அல்லது, அதற்கு, 'ஏகபோகமிராசு, இவரே' என்று எழுதிக் கொடுக்கப்பட்டுவிட்டதா!

பதவியாசை, என்பது, பஞ்சமாபாதகங்களில் ஒன்று என்பது போலவும் அந்தப் பாதகத்தைத் தீண்ட, இவர்கள் முயல்வது போலவும், 'ஐயயோ! பதவியாசை பிடித்தவர்கள்!!', என்று ஆர்ப்பரிக்கிறாரே, ஆச்சாரியார் — அவர் மட்டும், அரசுப் பதவியிலமர்ந்திருக்க வேண்டுமென்று தத்திக் குதித்து தாறுமாறுகள் செய்கிறாரே, அது, என்ன ஆசை?

அதற்கு மட்டும், 'தியாகச் சிகரம்' என்று பெயர்.

இந்த 'வாயில்லாததுகள்'—கொஞ்சம் வாய்திறந்து பேச ஆரம்பித்தால், இதற்குச் சூட்டப்படுவது, 'பதவியாசை'ப் பட்டம்.

அசெம்பிளியில் தோற்றாலும், 'ஆகாது! கூடாது!' என மக்கள் கூறினாலும், அசையாது அமர்ந்திருப்பதற்குப் பெயர், 'உண்மையான தலைவர்.'

ஆட்சியை சரிவர நடத்தவில்லை—

தர்பார்

தோழர் கருணாநிதிக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையான ரூ 35-க்காக, அவருடைய 10,000 ரூபாய் காரை, ஆளவந்தார், 'ஜப்தி' செய்தனராம் — திருவாரூரில். தோழர் சிறையில் கிடக்கும் சமயம், இந்நடவடிக்கையை எடுத்திருக்கிறது, இந்த அரசாங்கம். தொகையைக் கட்டமறுத்து சிறைவாசம், ஏற்றார், தோழர் கருணாநிதி. சிறையில்கிடந்தும் வாடுகிறார். எனினும், இந்தப் பாசிச வெறியர்கள், அவருடைய இல்லம் நோக்கி, தமது தூதர்களை அனுப்பியிருக்கிறார்கள். காரை எடுத்துச்சென்று, பிறகு, தந்திருக்கிறார்கள். இந்த நெறியற்ற —முறைகெட்ட—எதேச்சாதிகாரத் தர்பாரை என்னவென்று சொல்வது! பொதுமக்களே, இதுவா, நீதி?

என்று; இவர்கள் புகார் செய்தால், அது அசட்டுத்தனம்! அதிகார ஆசை! வகுப்புத்துவேஷம்! ஜனநாயக விரோதம்!

*

தனது ஆட்சியின் மீது அதிருப்தி கொண்ட காங்கிரஸ்காரர்களே, கடைசி மூச்சு உள்ள வரையிலும், பார்க்கப் போவதாகக் கூறுகிறாரே, ஆச்சாரியார் — அதற்கு அவர் காட்டியிருக்கும் காரணங்களில் முக்கியமானது, "ஜனநாயகத்தைக் காப்பாற்ற தான் பதவியிலிருக்கப் போவதாக," கூறுவதுதான்.

ஆச்சாரியார் பதவியிலிருந்து விலக மாட்டாராம்! ஏனெனில் ஜனநாயகத்துக்கு 'வேட்டு' வைக்கும் இந்தச் 'சண்டாளர்களின்' பிடியிலிருந்து, நாட்டைக் காப்பாற்ற வேண்டுமாம்.

ஹிட்லர், பொதுவுடைமை பற்றி பேசுகிறார்! புலி, அகிம்சா மார்க்கத்தின் அருமை குறித்து, போதிக்கிறது! ஆச்சாரியார், ஜனநாயகத்தைப் பற்றி, மார் தட்டுகிறார்!

தேர்தலில் நிற்காதவர் முதலமைச்சர். தேர்தலிலேயே கேட்டிராத அம்மையார், ஓர் அமைச்சர். தேர்தலில், தோற்கடிக்கப்பட்ட பக்தவத்சலம் ஓர் அமைச்சர். இது ஜனநாயகம்?

"ஏனய்யா! இப்படியெல்லாம் செய்கிறீர்?" — என்று கேட்பது, ஜனநாயக விரோதம்!

பண்டிதமணி

செந்தமிழ்ச் செல்வர் பண்டிதமணி மு. கதிரேசனார் அவர்கள், சின்னாட்களுக்குமுன் இயற்கை யெய்திய செய்தியைத் தோழர்கள் அறிவர். இலக்கியத் துறையில் சிறந்து விளங்கிய பண்டிதமணி அவர்கள், வடமொழியிலும், தென்மொழியிலும் பெரும் புலமையும் பேருள்ளமும் பெற்றவர்களாவர். அதனாலேயே மாற்றாரும், அவர் முன் மரியாதை காட்டினர். அத்தகைய நல்ல 'செல்வம்' தமிழ்ப்பூங்காவிலிருந்து, சென்றுவிட்டது. அவரது பிரிவால் கலங்கும் தமிழுலகுக்கும், குடும்பத்தாருக்கும், நமது மனமார்ந்த அனுதாபங்கள்.

விசித்திரமான, விளக்கம் — 'வியாசர் விருந்து' தயாரிப்பவர், அளிக்கிறார்;

*

சொந்தக் கட்சிக்காரர்களாயிற்றே என்ற எண்ணமும், கட்சியின் மானத்தைக் காற்றில் பறக்க விடுகிறோமே எனும் கவலையும், சிறிதுமின்றி — சினமான வார்த்தைகளைச் சிந்தக் காரணம் என்ன? அப்படி என்ன ஆபத்து வந்துவிட்டது நாட்டுக்கு?

காங்கிரஸ்காரர்கள் இவர் மீது அதிருப்திப்பட ஆரம்பிக்கிறார்கள்.

அதைக் காணச் சகிக்கமுடியவில்லை, ஆச்சாரியாரால்! அவர்கள் கொடி தூக்கும்போதும், மேடைகள் அமைத்துத் தரும்போதும், 'கண்மணிகளாக'த் தென்பட்டனர் — இன்று தன்மீது அதிருப்தி கொள்ளத் தலைப்பட்டதும், 'கடும் விஷமாக'க் காட்சி அளிக்கின்றனர்.

கை கட்டி, வாய்புதைத்து, இட்டதைச் செய்தால், அவர்கள் நல்லவர்கள்.

கொஞ்சம் ஏறுமாறாகப் பார்த்தால், கெட்டவர்கள்.

இந்தச் சுபாவத்துக்கு என்னவென்று பெயரிடுவது?

"ஐயா! முதல் மந்திரியாரே — நீர் சர்வாதிகாரமாக நடப்பது பிடிக்கவில்லை எமக்கு. கொஞ்சம் கவனித்துச் செலுத்தும் அதிகாரத்தை!" என்று சொந்தக் கட்சிக்காரர்கள், சொல்லியதும், அவர்களை யெல்லாம் வகுப்புவாதிகள் என்றும் தேசத்துக்குத் தீங்கிழைப்பவர்களென்றும் கூறுகிறார்!

இந்த 'நரிவேஷக்காரரின்' சுயநலம் சூறையாடப்படுமென்று தெரிந்தால், உடனே, எதிர்ப்பவர்களெல்லாம், வகுப்புத்துவேஷி'களாகவும் — தேசத் துரோகிகளாகவும் — பதவி யாசைக்காரர்களாகவும், ஆகிவிடுகிறார்கள்.

இதனை, உணராது — இந்த 'நரிகள்' காட்டும் பாதையில் சென்று, நம்மை 'வகுப்புத்துவேஷி'களென்றும், 'தேசத் துரோகி'களென்றும், கூசாது, திட்டினரே, தேசியச் சகோதரர்கள், அவர்களைச் சிந்திக்கக் கோருகிறோம்.

கடந்த வாரம், உங்களைத் தூற்றினார், ஆச்சாரியார். இந்த வாரம், அதே மொழிகளால், உங்களை அர்ச்சிக்கிறார்.

உள்ளெண்ணம், அறிவீர்கள் நீங்கள்.

கொடி தூக்கும்போது, நீங்கள், தேசோத்தமர்களாகத் தென்படுகிறீர்கள்!

'ராஜாஜிக்கு, ஜே!' என்று கூவுதலை நிறுத்திக்கொண்டால், உங்களைக் கொண்டுவந்து, நிறுத்தும் வரிசையை ஏதுவென்று, தெரிந்துகொள்ளுங்கள்.

'ஜே!' போட்டால், தியாகிகள்!

போடாவிட்டால், தேசத்துரோகிகள்!!

இத்தகைய, வகுப்புவாதத்தை வளர்த்து வந்திருக்கிறது, ஆரியம்.

அதற்குப் பலன் தருவோரைப் பாராட்டும்! எதிர்த்தோர் — எந்த முகாமிலிருந்தாலும் — ஒன்றாகவே கருதப்படுவர்!!

இந்த உண்மையை ஆச்சாரியார் வீசிய, இந்த விஷச்சொற்கள், அறியச்செய்யட்டும். உங்கள் அறிவுக் கண்களைத் திறக்கட்டும்.

★

வெளிவந்துவிட்டது!

THE ANSWER

விலை: அணா 6

(தபால் செலவு தனி)

அண்ணா, மதியழகன், நெடுஞ்செழியன், சம்பத், நடராசன் ஆகியோர் நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலங்கள்.

*

வியாபாரிகளுக்கு 20% கமிஷன் உண்டு.

*

விவரங்களுக்கு: —

பத்மா பிரஸ், காஞ்சீபுரம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 5, Tirukkachinambi St., Kancheepuram.